# சம்மாந்துறை பிரதேச சபையின் 12 வது பொது கூட்டறிக்கை 2019.02.12

சம்மாந்துறை பிரதேச சபையின் 12 ஆவது அமர்வு 2019.02.12 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப். எம்.ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, இது நமது 12 வது கூட்டத் தொடர். அதாவது ஒரு வருடம் அங்கத்தவர்களாக இந்த சபையில் பூர்த்தி செய்யும் அமர்வு. அதனால் இந்த அமர்வு உரிய நேரத்திற்கு ஆரம்பிக்கப்படுகின்றது. நாம் அனைவரும் நேரத்திற்கு வர வேண்டும். ஏனென்றால் இந்த நாட்டில் அரசு இருக்கும் நிலையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் பொண்னான நேரம். அறுவடை செய்ய முடியுமானவையை அறுவடை செய்யப்பட வேண்டிய காலம். என்று கூறி எல்லோரையும் இந்த அமர்வுக்கு வரவேற்றவனாக,

இந்த அமர்விற்கு நமது கௌரவ உறுப்பினர் ILM.மாஹிர் அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் சபைக் கூட்டத்திற்கு வருகைதர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு லீவு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ். நளீம்

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த அமர்வில் நான் உரையற்றுகின்ற போது ஊரில் மர்ஹூம்களான 02 பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களையும் அவர்கள் செய்த சேவைகளையும் குறிப்பிட்டிருந்தேன். அது எழுதப்பட வில்லை. அதே போன்று கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களின் முதல் எழுத்துக்கள் தவறாக அச்சிடப்பட்டுள்ளது.

**தீர்மானம் 01**
சென்ற மாதக் கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட திருத்தங்களோடு ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற மாதத்தில் இருந்து இன்று வரை பல விடயங்கள் பற்றி நாம் பேச வேண்டி உள்ளது. அந்த வகையில் மல்லிகைதீவு கிராமத்தில் நீரின் தரத்தினால் சுமார் 08,09 போர் கிட்னி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பதாக அறியக்கிடைத்ததும் உடனடியாக நகர திட்டமிடல் நீர்பாசன அமைச்சர் கௌரவ றவுப் ஹக்கீம் அவர்களுக்கு சபையினால் உத்தியோக பூர்வமான வேண்டுகோளை விடுக்க அமைச்சில் இருந்து உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு ஜனவரி 31 ஆம் திகதி CKUD நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மல்லிகைத்தீவு கிராமத்திற்கு நீர் வழங்குவதற்காக உடனடியாக மதிப்பீட்டறிக்கை தரும்படி DGM East க்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

நான் நினைக்கின்றேன் 06 மாத காலத்திற்குள் அந்த வேலைகள் இடம்பெறும் இதற்கு உடனடியான நடவடிக்கை எடுத்ததற்கு கௌரவ அமைச்சருக்கு சபையின் சார்பாக நன்றி கூறியவனாக, சென்ற கிழமை நமது கௌரவ புதிய ஆளுனர் MLAM. ஹிஸ்புள்ளாஹ் அவர்களைச் சந்தித்து நமது சபைக்கும் மாகாண சபைக்கும் இடையில் இருந்த சில பிரச்சினைகளைப் பற்றி பேசித் தீர்வு கண்டோம். அதில் முதன்முதலாக நமது விளையாட்டுத் தொகுதியினை சம்மாந்துறை பிரதேச சபைக்கு உத்தியோக பூர்வமாக கையளிப்பதற்கு திணைக்களங்களுக்கும், பிரதம அமைச்சரின் செயலாளர், உள்ளூராட்சி செயலாளர் ஜனாப். அஸீஸ் அவர்கள் எழுத்து மூலம் ஆளுனர் அவர்களுக்கு அறிவித்திருக்கின்றார்.

இதனை நமது சபைக்குக் கொடுப்பதுதான் பொருத்தம் என்று அவரின் சிபார்சின் அடிப்படையில், ஆளுனர் அவர்கள் உடனடியாக இதனை சம்மாந்துறை பிரதேச சபைக்கு பாரம் கொடுக்க வேண்டும் என்று ஒரு கட்டளை பிறப்பித்திருக்கின்றார். இந்த மாத முடிவிற்குள் அது நிறைவேறும். ஏறத்தாள 07 வருட போராட்டத்தின் முடிவு. அதன் அடிப்படை என்னவென்றால் இந்த ஊரின் வளங்கள் இந்த ஊரின் நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டும் என்ற வாதம். இறைவனின் கிருபையால் இந்த மாத இறுதிக்குள் நிறைவிற்கு வரும் என்று நான் பிராத்திக்கின்றேன்.

சென்ற சனிக் கிழமை கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் தவிசாளரை காலிக்கு வருமாறு கட்டளை இட்டிருந்தார். அங்கு பிரதமரின் கையினால் நமது சபைக்கு ஒரு புதிய Compactor கிடைத்துள்ளது. அதன் பெறுமதி 06 மில்லியன். இது கிடைப்பதற்கு முயற்சித்தவர்கள் கௌரவ இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் அவர்கள். நமது கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் அந்தக்கடிதத்தை கொண்டு சென்றிருந்தார். ஏற்கனவே சம்மாந்துறைக்கு ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதில் மாற்றங்கள் வரக்கூடாது என்ற விதத்தில் கௌரவ இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கும் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களுக்கும், உதவி செயலாளர் நமது ஊரைச் சேர்ந்த ஜனாப் நயிமுடீன் அவர்களுக்கும் நமது சபை சார்பில் நன்றி கூற விரும்புகின்றேன்.

நேற்று கௌரவ இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் அவர்கள் நமது அப்துல் மஜீட் மண்டபத்தில் LGDSP சம்பந்தமான ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது. இது உண்மையாக நடைமுறைக்கு வருமானால் நமது கமனெகும அல்லது புறநெகும திட்டத்திற்கு சமனானதாக இருக்கும். இதில் ஒவ்வொரு சபைக்கும் 100 மில்லியன் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. வட்டார ரீதியாக நாம் திட்டங்களை இணங்கண்டு முன்னுரிமைப்படுத்தி செயற்படுத்தப்பட வேண்டியதாக இருக்கின்றது. அதற்குத்தான் சென்ற சபையில் திட்டங்கள் உருவாக்குவது பற்றி கூறியிருந்தேன். எது எது அதற்குள் உள்ளடக்கப்படலாம் என்ற விடயத்தை மீண்டும் சுருக்கமாகக் கூறுகின்றேன். அதனை நீங்கள் வட்டார ரீதியில் பட்டியல் அங்கத்தவர்கள் அல்லது நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் நீங்கள் விரும்பும் அல்லது வசிக்கும் வட்டாரத்தில் அங்கத்தவர்களுடன் இணைந்து உங்களின் கருத்துக்களையும் உள்வாங்கக்கூடியதாக அந்தத் திட்டங்களை செய்ய வேண்டி இருக்கின்றது. இதில் கட்சி பேதங்கள் இல்லாமல் அனைவரினதும் கருத்துக்களையும் உள்வாங்கி செயற்பட்டால் நாம் இதனை இலகுவாக செய்து முடிக்கலாம். அந்தவகையில,

01. கிராமிய வீதிகள்
02. வாகனத்தரிப்பிடம்
03. சிறுவர் பூங்கா
04. விளையாட்டு மைதானம்
05. நீர் வழங்கல் திட்டம்
06. வாராந்த சந்தைகள்
07. சுகாதார நிலையங்கள், சனசமூக நிலையங்கள்
08. கலாச்சார மண்டபங்கள்
09. நூலகங்கள்
10. சிறு பாலங்கள்
11. வடிகான்கள்

இதில் உங்கள் வட்டாரத்தில் முன்னுரிமைப்படுத்த வேண்டியவைகளை முன்னுரிமைப்படுத்தி 10 மில்லியனுக்குள் அவைகளை விரைவில் செய்து முடிக்க முடியுமோ அவைகளை விரைவில் அதாவது நான் நினைக்கின்றேன் மார்ச், ஏப்ரல் மாதங்களில் செயற்படுத்தப்படலாம். அதற்கிடையில் நாம் தயாராக இருக்க வேண்டும்.

சனசமூக நிலையங்கள் என்று வந்தவுடன் நமக்குள் முதலில் எழுகின்ற கேள்வி என்னவென்றால் இதற்கு இடம் இல்லை என்பதுதான். அதற்கு எனது அபிப்பராயம் அந்த வட்டாரங்களில் ஏதாவது அரச காணிகள் மற்ற நிறுவனங்களால் பராமரிக்காப்படும் உதாரணமானக, MPCS கட்டடம் இருந்தால் அதுவும் பிரதேச சபையும் இணைந்து ஒரு சனசமூக நிலையத்தை உருவாக்கி அந்தப் பகுதிக்குள் கூட்டங்கள் போன்ற ஏதாவது தேவைகளுக்கு வாடகைக்குக் கொடுத்தால் வருமானம் எடுக்கக்கூடிய ஓர் அமைப்பாக வந்தால் MPCS க்கும் வருமானம் வரும் நமக்கும் பிரயோசனமாக இருக்கும்.

மல்கம்பிட்டி, வீரமுனை இவைகள் இரண்டையும் தவிர வேறு எந்த இடத்திலும் அரச காணிகள் எடுக்ககூடிய நிலையில் இல்லை. மாற்று வளியாக இவைகளைச் செய்யலாம். அதனை உடனடியாக கௌரவ உறுப்பினர்கள் அக்கரை காட்ட வேண்டும் என்று கூறுவதோடு,

ஒரு வருடம் முடிவடைகின்றது. ஆனால் சில வட்டாரங்களில் இருந்து Road Inventry இன்னும் வரவில்லை. இந்த மாத முடிவிற்குள் தராவிட்டால் நான் ஊர் குழுவுடன் இருக்கின்ற தகவல்களை ஆரம்பிக்க வேண்டும். காரணம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சில சவால்களை விடுக்கின்றார்கள். அதாவது இவைகள் வர்தமானியில் பிரசுரிக்கப்படாவிட்டால் அவைகள் சபைக்குரியதல்ல என்ற தொனியில் வருகின்றார்கள். எனது கருத்து என்னவென்றால் எந்தெந்த பாதைகள் தேசிய பாதைகளாகவோ, மாகாண சபைகள் பாதைகளாகவோ பிரகடனப்படுத்தப்படாத சகல பாதைகளும் பிரதேச சபைக்குரியது என்பதுதான் எனது வாதம். ஆனால் அவ்வாறு இருந்தும் நாமும் சட்டப்படி வர்தமானியில் பிரசுரிக்காவிட்டால் அனைத்துக்கும் அதாவது பினக்குள் தீர்ப்பதற்கும், அபிவிருத்தி வேலைகளுக்கும் இலகுவாக இருக்கும். இந்த மாத இறுதிக்குள் அந்த வேலைகள் ஆரம்பிக்க வேண்டியதாக இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கிராமிய வீதிகள் என்று வருகின்ற போது தனியாருக்கு உரித்தான வீதிகளும் வருமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். காரணம் நமது ஊரில் இருக்கின்ற அனைத்துப் பாதைகளும் பொதுப் பாதைதான் என்ற ஒரு பழக்கம் இருக்கின்றது. அவ்வாறல்ல சில பாதைகள் உறுதியினால் விடப்பட்ட பாதைகள். அந்தப் பாதைகள் நமது பதிவேட்டில் இல்லை. அவைகளை உள்வாங்க வேண்டுமானால் அந்தப் பாதையில் வசிக்கின்ற அனைவரும் பாதையின் எல்லையையும் குறிப்பிட்டு அதனை தாங்கள் பிரதேச சபைக்கு பாரப்படுத்துகின்றோம் என்று கையெப்பம் இட்டுத் தந்தால் நாம் அதனை நமது பதிவேட்டிற்குள் எடுத்துக் கொள்ளலாம். அந்தப் பாதைகளை மாத்திரம்தான் நாம் அபிவிருத்தி செய்யலாம். தனியார் பாதைகளுக்கு நாம் எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளையும் செய்ய முடியாது. காரணம் அவைகள் கணக்காய்வுக்குள் வரும். அதனை சபையில் பாரம் எடுக்கின்றோம் என்ற முடிவு எடுக்கப்பட்ட பின்னர் செய்தால் பிரச்சினை வராது. அவை சபையின் சொத்தாக மாறும் பட்சத்தில்தான் அவை செயற்படும்.

தவிசாளருக்கு மிகவும் பாரிய சவாலாகவும் பிரச்சினைகளாகவும் வருவது எல்லைப் பிரச்சினைகளும், சட்டவிரோதமாக கட்டடங்களும். உதாரணமாக, பெரிய வளவுகளை பிரித்து விற்பதனால், சட்டப்படி திட்டமிட்டு பிரித்து அது சபையில் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர்தான் Partition Plan படி உறுதி எழுத முடியும். இல்லாவிட்டால் அது சட்டப்படி பிழையானது. அவ்வாறு செய்யப்படாத சட்ட விரோதமான வளவுகளை வாங்கி அதற்குள் தனிப்பட்ட வாய்மூல ஒப்பந்தங்கள் மூலமாக பாதைகள் அமைத்து அதனை மீண்டும் விற்றுவிட்டு பின்னர் பாரிய பிரச்சினைகளுடன் இங்கு வருகின்றனர். இந்த சபையில் எழுத்தில் இருப்பதை வைத்துத்தான் தீர்மானம் எடுக்க முடியும்.

சட்டவிரோமதான வளவுகளை வாங்கி அதற்குள் சட்டவிரோதமான வீடுகளை அமைத்து அடுத்த வீட்டுக்குள் நீர் செல்வது போன்ற பல பிரச்சினைகள் வருகின்றது. இரண்டும் சட்டவிரோதமான கட்டடங்கள்தான். இவ்வாறான பிரச்சினைகள் வருகின்ற போது ஒன்றும் செய்ய முடியாத வகையில் தேங்கி நிற்கின்றது. இதனை பிரதேச சபையின் சட்டத்தின்படி நாம் நீதி மன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். ஏனென்றால் எவருக்காவது நீதி வழங்கப்பட வேண்டும். இதில் ஒரு வருடமாக சில பிரச்சினைகள் இருக்கின்றது. அதனால் நமது சபையினால் ஒரு சட்டத்தரனியை நியமித்து வழக்குகளைத் தொடர்ந்தால்தான் சட்ட விரோதமான கட்டடடங்கள் முடிவுக்கு வரும். நேற்று

இடம்பெற்ற கலந்துரைலயாடலிலும் கூட சட்டவிரோதமான கட்டடங்கள் பற்றிக் கூறப்பட்டது. சட்டடவிரோதமான கட்டடமாக இருந்தாலும் அது ஆபத்தான கட்டடங்களாகவும் இருக்கின்றது. எனவே இந்த வழக்குகளுக்கு ஒரு சட்டத்தரணியை அமர்த்தி அந்தப் பிணக்குகளை நீதி மன்றத்திற்கு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

**தீர்மானம் 02**
சட்ட விரோதமான கட்டடம் தொடர்பான பிணக்குகளை இணக்கசபையிலோ அல்லது நீதி மன்றத்திலோ தீர்ப்புக்கள் வழங்கி பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஒரு சட்டத்தரணியை அமர்த்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அடுத்து பாரிய சவாலும் நீங்கள் அனைவரும் என்னுடன் மனவருத்தப்படுகின்ற விடயமும்தான் தெருலாம்பு பற்றியதாகும். தெருலாம்பு பராமரிப்பு பற்றி நமது வரவு செலவுத்திட்டத்தில் பாத்தீர்களானால் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. சராசரி ஒரு மாதத்திற்கு 02 இலட்சம் ஆனால் அதற்கு ஒதுக்கீடு இருந்தாலும் 02 இலட்சம் ரூபாவிற்கான வருமானம் அந்தக் காலத்திற்குள் வராவிட்டால் அதனை செலவு செய்ய முடியாது. ஒரு நாளும் இந்த சபையில் வருமானம் பற்றிக் ஒருவரும் கேட்பதில்லை. செலவுகளை மாத்திரம்தான் பேசுகின்றோம். அடுத்த அமர்வில் உங்களுக்கு 02 மததத்திற்குரிய வரவும், செலவும் ஒப்பீட்டுப் பாக்கின்ற நேரம் உங்களுக்கு விளங்கும். செலவு செய்கின்ற விடயங்களில் மிகவும் கவனமாக முதல் 06 மாத காலத்திற்கு செலவு செய்தால்தான் முத்திரை, நீதிமன்ற வருமானங்கள் எவ்வளவு வருகின்றது என்று தெரியும். ஆரம்பத்தில் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு உள்ளது என்று செலவு செய்து கொண்டு போனால் பின்னர் செலவுகளை மேற் கொள்வதற்கு பணம் இல்லாமல் போய்விடும். தயவு செய்து இவைகளில் நீங்கள் அக்கரை காட்டி இதனை எவ்வாறு முகாமைத்துவம் செய்யலாம் என்று நீங்கள் கூற வேண்டும்.

நிச்சயமாக இருளாக இருக்கின்ற இடங்களுக்கு மின் விளக்குகள் போடத்தான் வேண்டும். ஆனால் அதில் ஒரு முகாமைத்துவம் இருக்க வேண்டும். அவைகளை என்னிடம் மாத்திரம் பொறுப்பாக விடாமல் நீங்களும் மக்களிடம் இதற்கான காரணங்களை குறிப்பிட வேண்டும். ஏனென்றால் அந்த அதிகாரத்தை தருபவர்கள் நீங்கள்தான். அனைவருக்கும் மின் விளக்குகள் போட்டுக் கொடுப்பதற்கு எனக்கும் விருப்பம்தான். ஆனால் ஒரு நியாயம் இருக்க வேண்டும். சில இடங்களில் ஒவ்வொரு தூணிலும் மின்விளக்கு போடப்பட்டுள்ளது. சில இடங்களில் மின்விளக்கு போடவேண்டிய இடத்தில் இல்லாமல் வேறு இடங்களில் போடப்பட்டு இருளாக உள்ளது. உதாரணமாக பார்தால் ஒரு பாலம், அடுத்த வீதிக்கு திரும்பும் வீதி போன்ற இடங்களில் கண்டிப்பாக மின் விளக்குகள் போட வேண்டும். இவைகளை நிவர்த்தி செய்வதனை என்னிடம் மாத்திரம் விடாமல் நீங்களும் அதனை ஒழுங்கு படுத்த வேண்டும். எதிலும் நமக்குள் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். நமது வருமானத்தையும் நாம் பார்க்க வேண்டும். நாம் செய்கின்ற சேவைகளை ஒழுங்காக மக்களுக்கு பிரயோசனமாக சேர்க்க வேண்டிய வகையில் செய்ய வேண்டும்.

திண்மக்கழிவு முகாமைத்துவம் விடயங்களில் கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் சரியான அக்கரை காட்டுவீர்களேயானால் சிறந்த முறையில் செலவுகளை மீதப்படுத்தலாம். மிகவும் பாரிய செலவு திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு வருகின்றது. இன்னும் அதனை நம்மால் ஒழுங்கு படுத்த முடியாததனால் காரை தீவிற்கு இன்னும் 03 மாத காலம் நீடிக்க வேண்டி இருக்கின்றது. அந்த வகையில் தற்போது கிடைத்திருக்கும் Compactor பெரும் உதவியாக இருக்கும். அதற்கு Tractor மூலம் கொட்டுவதற்குரிய மேடை (Tramp) ஒன்றினை Compost Yard இல் அமைத்து அவைகளை சரி செய்ய வேண்டும். சித்திரை மாதத்திற்கு முதல் முழு ஊரையும் சுற்றியுள்ள குப்பைகளை எடுக்ககூடியவாறான வேலைகளைச் செய்ய வேண்டும். உதாரணமாக சென்னல்

கிராம், மல்வத்தை, வளத்தாப்பிட்டு போன்ற கிராமியப் பகுதிகளுக்கு உக்காதவைகளை மாத்திரம் (பிளாஸ்ரிக், பொலித்தீன்) எடுக்கப்படும். காரணம் அந்த மக்களையும் நாம் Compostting செய்வதற்கு பழக்க வேண்டும்.

ஏனென்றால் அங்கு வளவுகள் உள்ளது. அவர்களுக்கு நாம் Bin வாங்கிக் கொடுத்தாவது பழக்கினால் அது அவர்களுக்கும் பிரயோசனமாக இருக்கும் நமக்கும் அதிகமான கழிவுகள் குறையும். அவர்களையும் திருப்திப்படுத்தியதாக கிழமைக்கு ஒரு நாள் உக்காத பொருட்களை சேகரிக்கக்கூடிய நிலை வர வேண்டும். அதற்கு உங்களது பங்களிப்பு வேண்டும். உக்கக்கூடியது, உக்காதது என்று பிரித்து வைக்குமாறு கூறினால் பேக்கின் கீழால் உக்காத கழிவுகளை வைத்து விட்டு மேலால் உக்கக்கூடிய கழிவுகளை வைத்துக் கொடுப்பதாக முறைப்பாடு வருகின்றது. அவை பற்றி ஊழியர்கள் கூறினால் அவர்களுடன் மக்கள் முரன்படுகின்றார்கள். எனவே, ஊழியர்கள் அந்த சவாலுக்கு முகங்கொடுக்கக்கூடாது. அந்த நிலையை நாம் உருவாக்க வேண்டும். அதனை செய்வதற்கு உங்களது உதவிகளை நாடுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 06 மில்லியன் பெறுமதியான Compactor ஐ எடுப்பதற்காக எமது சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களுக்கும், கௌரவ தவிசாளராகிய நீங்களும், கௌரவ இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் அவர்களுக்கும், இந்நாட்டின் பிரதமர் ரனில் விக்கிரம சிங்க அவர்களுக்கும் சபை ஊடாக நன்றிக் கடிதங்களை அனுப்பினால் சிறப்பாக இருக்கும் என்பது எனது கருத்து.

தெருலாம்பு விடயத்தில் நான் மிக நீண்ட நாட்களாக எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக அதி வேக பாதைகளுக்கென்று 4 கோடி ரூபாவுக்கான மதிப்பீட்டறிக்கை நான் பெற்றிருக்கின்றேன். அமைச்சரிடமும் பேசியிருக்கின்றேன். எமது ஹிஜ்றா சந்தி சுற்று வட்டாரத்தில் இருந்து பிரிகின்ற 40 M க்கு 01 தெருலாம்பு வீதம் 04 பாதைகளுக்கும் ஒவ்வொரு கோடி ரூபா பெறுமதியான தெருலாம்புக்கள் பொருத்துவது சிறப்பாக இருக்கும். Deputy Director RD அவர்களுடன் பேசிய போது அதிவேக பாதை என்றுதான் கூறினார்.

இதுவும் RDA வீதிதான் என்பதனால் அதற்கான அறிக்கைகளை கௌரவ அமைச்சரை சந்தித்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றேன். அது எமது சபை உறுப்பினர் என்ற வகையில் இந்த சபை பெருமைப்பட வேண்டும். ஆனால் நான் எடுக்கின்ற இந்த முயற்சியை நமது ஊரில் இருக்கின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவர் எனக்கு அந்த அறிக்கையை தருகின்ற நேரத்தில் உறுப்பினருக்கு தெரியுமோ தெரியாது செயலாளராகவும் இருக்கலாம் சில இடைஞ்சல்களும் இடப்பட்டிருந்தது. நான் கௌரவ அமைச்சர் கபீர் ஹாசிம் அவர்களுடன் பேசிக்கொண்டதற்கினங்க இந்த முயற்சி விரைவில் வெற்றியடையும் என நான் கருதுகின்றேன்.

பாதைக்கு பெயரிடுதல் தொடர்பாக கூறியிருந்தீர்கள். தைக்காப்பள்ளி வட்டாரம் அதற்கு பெயரிடப்பட்டுள்ளதா? என்பதனை தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தைக்காப்பள்ளி வட்டாரம் வந்துள்ளது. கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் தந்துள்ளார்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, திண்மக்கழிவுப் பொருட்கள் இந்த ஊருக்கு இருக்கின்ற சவாலாகக் கூறினீர்கள். அதே நேரத்தில் புதிய வாகனத்தினால் இப்போது நாம் எடுக்கின்ற பிரதேசங்களை உள்ளடக்கி மேலும் வாகனங்கள் வரும்போது செய்தால் சிறப்பாக இருக்கும் ஏனென்றால் அந்தப்பகுதிகளில் அதிகமான இடங்கள் இருக்கின்றது. அதில் உக்காத கழிவுகளை தீயிட்டு அளித்துக் கொள்ளலாம். உக்கக்கூடிய கழிவுகளை அகழி வெட்டி இடலாம். நான் அவர்களின்

கழிவுகளை எடுக்க வேண்டாம் என்று கூறவில்லை. முதலில் இங்குள்ள பிரச்சினைகளைத் தீர்த்து விட்டு பின்னர் அவைகளைச் செய்யலாம் என்று கூறுகின்றேன்.

நேற்று கௌரவ அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஒவ்வொரு பிரதேச சபைக்கும் 100 மில்லியன் ஒதுக்கீடு செய்வதாக கூறியிருந்தார். அதனை நீங்களும் கூறியிருந்தீர்கள். அங்கத்தவர்கள் என்ற அடிப்படையில் நாங்கள் பட்டியலில் இருந்து வந்தவர்கள் இருக்கின்றோம் எங்களையும் உள்வாங்கி பேசியிருந்தீர்கள். இருந்தாலும் எங்களுக்குள் முரண்பாடுகள் வந்துவிடாமல் இன்னும் தெளிவு படுத்திப் பேசினால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறியது போல் தெருலாம்பு பிரச்சினை பாரிய பிரச்சினையாகத்தான் இருக்கின்றது. ஏனென்றால் உறுப்பினர் என்ற வகையில் எங்களிடம்தான் முதலில் வந்து கூறுவார்கள். அந்த வகையில் அந்தத் தகவலை உங்களிடம் சமர்ப்பிக்கின்றோம். சில வேளைகள் நடக்கலாம். நடக்காமலும் இருக்கலாம். எனது கருத்து என்னவென்றால் அதிகமான சனசமூக நிலையங்கள் இருக்கின்றது. அதனை சார்பாக வைத்து அதிகமான கொந்தறாத்கள் செய்கின்றார்கள். அதில் சனசமூக நிலையங்களுக்கு 02,03 வீதமான பணம் கொடுக்கப்படுகின்றது. அதில் ஒரு தொகைப் பணத்தை அதனூடாக அன்பளிப்பு செய்வதூடாகவோ அல்லது மின் விளக்குகளை வாங்கிப் பொருத்துவதற்கு ஏற்பாடுகள் நடக்குமானால் சபையின் மேலதிகமான செலவைக் குறைப்பதற்கான சந்தரப்பமாக அமைகின்றது.

தற்போது நெல் காயவைக்கின்ற காலம் ஆகையால் வயல் வெட்டுவதற்கு முன்னரே பேக்குகளைப் போட்டு இடம் பிடிக்கின்றார்கள். இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இன்று காலையில் வரும் போதும் அந்தப் பிரச்சினை போய்கொன்டிருந்தது. நமது ஊரில் அனைவரும் விவசாயம் செய்பவர்கள். அதனால் சபையினால் நெல் காயவைப்பதற்கு ஒரு பகுதியை தீர்மானித்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். வீதிகளில் கல்லை வைத்து பேக்கால் மூடுகின்றார்கள். அதனால் எதிர்பாராவிதமாக பல விபத்துக்கள் ஏற்படுகின்றது. இது நமது சபைக்குரிய விடயம். எனவே, நெல் காயவைப்பதற்காக ஒரு ஏரியாவைப் பெற்றுக் கொடுத்தால் சிறந்தது என்பது எனது கருத்து. இதற்கு தவிசாளர் அவர்கள் சிறந்த தீர்வைக் கூற வேண்டும். அதனைப் பகிரங்கப்படுத்தவும் வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, திண்மக்கழிவு அகற்றுகின்ற பாரிய சவாலில் இருந்து விடுபடுகின்ற ஒரு சந்தர்பமாக எமக்கு ஒரு Compactor வகனம் கிடைக்கப்பெற்றுள்ளது. எமது சபைக்கு மிக விரைவில் இன்னும் ஒரு Compactor வாகனம் கிடைக்கும் என்ற சந்தோசமான செய்தியைக் கூறியவனாக,

அனுமதி அளிக்கப்படாத கட்டடங்கள், தெருலாம்பு பொருத்துதல் இவைகளில் மிக துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டிய சில தேவைகளை ஏற்படுகின்ற நேரம் அவை செய்ய வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. உதாரணமாக, என்னுடைய வட்டாரத்தில் இருக்கின்ற புளக் ஜே மேற்கு 02 ம் பிரிவிலே 19.01.2019 ஆம் திகதி அன்று சட்ட விரோதமாக ஒருவர் பாதையை மறித்து மதில் கட்டுகின்ற விடயம் சம்பந்தமாக அன்றய தினம் சனிக்கிழமை சபை நடவடிக்கை இல்லாத காரணத்தினால் எமது சபையிலே இருக்கின்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை நேரடியாக அழைத்துச் சென்று அந்த வேலையை செய்யாமல் இடைநிறுத்திவிட்டு வந்து மீண்டும் அதனை சபையில் சமர்ப்பித்து சபையினூடாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் அந்த வேலையை செய்ய வேண்டாம் என்று நிறுத்தியும்கூட அவர் விரும்பியவாறு அந்த வேலையை செய்கின்றார். ஏறத்தாள ஒரு மாதங்கள் தாண்டியும் இன்னும் அவருக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை.

அதே போன்று என்னுடைய வட்டாரத்திலே தெருலாம்பு பொருத்துவதற்காக மிகவும் முக்கியமான இடங்களை தெரிவு செய்து சில மின்விளக்குகள் இடக்கூடிய கம்பங்களின் இலக்கங்களை எழுதி உங்களின் அனுமதியுடனும் சபையின், செயலாளரின் அனுமதியுடனும் கையளித்தேன். அதில் ஒன்று தவிசாளர் நீங்கள் நேரடியாக வந்து பார்வையிட்டு இந்த இடத்திலே மிக முக்கியமான லாம்பு பொருத்த வேண்டும் என்று கூறி அந்த இடத்திற்கு லாம்பு பொருத்துவதற்காக எழுத்து மூலம் சமர்ப்பித்து ஏறத்தாள 03 மாதமாகின்றது. இன்னும் அந்த லாம்பு பொருத்தப்படவில்லை. நான் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு 2018.12.17 ஆம் திகதி மீண்டும் ஒருதடவை ஞாபகப்படுத்தி இந்த மின்விளக்குகளைப் பொருத்துங்கள் என்று கூறியும் இதுவரைக்கும் பொருத்தவில்லை.

மேலும் சபையினுடைய தவிசாளர் இல்லாத சந்தர்ப்பத்தில் செயலாளர் அவர்களினுடைய அங்கீகாரத்துடன் கொடுக்கப்பட்ட வேலைகளும் இதுவரைக்கும் நான் கொடுத்த இலக்கங்கள் இடப்பட்ட கடிதத்தினை மீள் பரிசீலனையாவது அல்லது அந்த இடத்திற்கு சென்று அதனை செய்வதற்காவது பார்வையிடாதது கவலையடைகின்ற விடயமாக இருக்கின்றது. சாதாரன ஒரு பொது மகன் கொடுக்கின்ற முறைப்பாடுகளும் இவ்வாறே புறந்தள்ளப்படுகின்றது. இந்த சபையிலே இருக்கின்ற உறுப்பினர்களால் வழங்கப்படுகின்ற முறைப்பாடுகளும் இவ்வாறு கவனயீனமாக இருந்தால் மக்களுக்குரிய சேவைகளை வழங்குவது மக்கள் நேரடியாக உறுப்பினர்களிடமே பொறுப்புக்களைச் சாட்டுவார்கள். அவர்கள் மீதே இந்தக் குற்றங்களும் பாரம் எடுக்க வேண்டிய பொறுப்பும் எங்களிடம்தான் வந்து முடிகின்றது.

அதே போன்று நீங்கள் கூறியவாறு சில பாதைகளிலே ஒவ்வொரு கனுவிலும் தெருலாம்பு பொருத்தப்படுகின்றது என்று சொல்லப்படுகின்றது. இது உண்மையில் மிக முக்கியமான இடங்களில் பொருத்தப்பட்டிருந்தால் ஏற்றுக் கொள்ள முடியும். இன்று இருக்கின்ற சூழ்நிலையிலே இப்போது வேளான்மை அறுவடை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்னும் சில வாரங்களில் காட்டு யானைகளின் அட்டகாசங்கள் உதாரணமாக என்னுடைய வட்டாரம் அதே போல் மல்வத்தை, வளத்தாப்பிட்டி வட்டாரங்களில் காட்டு யானைகள் மிகவும் வேகமாக தாக்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது.

ஆகவே, நான் இலக்கங்கள் பொருத்திக் கொடுக்கப்பட்ட பிரதேசம் சென்னல் கிராம் 02 ம் பிரிவிலே சுளயஞ்சேனையை மையப்படுத்திய பிரதேசம். காட்டு யானைகள் வந்து தாக்குகின்ற இடம். அந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற மக்கள் அதிகாலையிலே பள்ளிவாசலுக்கு அல்லது தொழில் நிமித்தமாக செல்வதற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கின்ற பிரதேசம், காட்டுப் பிரதேசம், பாதைகள் சீராக இல்லாத பிரதேசம் அதேபோன்று வேலைகளை முடித்துவிட்டு வீட்டிலே நிம்மதியாக வந்து சேர்வதற்கு அந்தப் பாதைகளும் சீராக இல்லை வெளிச்சமும் இல்லை. நேற்று இரவுகூட வயது முதிந்தவர் அந்த இடத்தில் வெளிச்சம் இல்லாத காரணத்தினால் அவர் வந்த சைக்களில் இருந்து விழுந்து இன்று வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுகின்ற போது நேரடியாக தாக்கப்படுபவர்கள் நாங்கள்தான். எங்களிடம் வருகின்ற சுமையை மாறி நாங்கள் உங்களிடம் விட வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. நீங்கள் அதனை நெறிப்படுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. அத்தோடு சபையிலே இருக்கின்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நான் யாரையும் குற்றம் சாட்டவில்லை, அதனை சரியாக திட்டமிட்டு நெறிப்படுத்த வேண்டும். நீங்கள் அனுமதியளித்த செய்ற்பாட்டை அவர்களால் நெறிப்படுத்த முடியாதென்றால் எதற்காக இந்த சபையில் நாங்கள் அங்கத்தவர்களாக இருக்கின்றோம். அவர்கள் இந்த சபையில் பணிபுரிய வேண்டும். அவ்வாறேதான் சபையின் தவிசாளர் இல்லாத சந்தப்பத்தில் சபையின் அதிகாரம் செயலாளரிடம் இருக்கின்றது. அவ்வாறான செயலாளரால் நெறிப்படுத்தப்பட்ட விடயங்களை செயற்படுத்த முடியாவிட்டால் எதற்காக இந்த சபையில் நாங்கள் உறுப்பினராக இருக்க வேண்டும். அவர்கள் உத்தியோகத்தராக பணிபுரிய வேண்டும். இந்த சபையினூடாக எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த விதமான தேவைகளையும் நெறிப்படுத்த வேண்டிய தேவையும் இல்லை. என்னுடைய வட்டாரத்திலும் குறிப்பாக இந்த

சபையினூடாக செய்ய விரும்புவது தெருலாம்பு பொருத்துகின்ற ஒரே ஒரு விடயம்தான். மற்றய ஏனைய தேவைகளை இறைவனின் அருளால் நான் வேறு ஒரு வகையில் செய்து விடுவேன்.

தெரு லாம்பு பொருத்துகின்ற விடயத்தில் என்னுடைய வட்டாரத்தில் முன்னுரிமை தரப்பட வேண்டும். இன்று எமது ஊரின் மத்தியில் இருக்கின்ற பசார் வீதியில் 01 வது கனுவில் இருந்து 12 வது கனு வரைக்கும் தொடர்ச்சியாக அதிலும் அதி நவீன LED லாம்புகள் பொருத்தப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக இங்கிருக்கின்ற கௌரவ உறுப்பினர்கள் மனவருத்தப்பட தேவையில்லை. அதே போன்று மல் 13 ம் வீதிக்கும் 14 ம் வீதிக்கும் இடையில் இருக்கின்ற ஒரு குறுக்கு வீதியிலே இருக்கின்ற 05 கனுக்களுக்கும் லாம்பு பொருத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பொருத்துவதற்கு எந்த விதிமுறையிலே இந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மின்னியலாளர்கள் பொருத்தினார்கள். சென்நெல்கிராமம், மல்வத்தை, நெய்நாகாட்டிலே இருக்கின்ற பிரச்சினைகளை விட இந்த வீதிகளில் பிரச்சினைகள் கூடுதலாக இல்லை. ஆகவே, இவ்வாறான சந்தப்பங்களில் எங்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்று கேட்டு முடிக்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தெரு விளக்கு சம்பந்தமாக நான் கூறுவதற்கு முன்னரே நீங்கள் கூறிவிட்டீர்கள். இருந்தாலும் அதில் ஒரு தெளிவு படுத்தலை ஏற்படுத்த வேண்டும். அதாவது கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் யானை இன்னும் 02 வாரங்களில் வரும் என்று கூறினார். 02 வாரங்களில் அல்ல நேற்றும் அதற்கு முதல் நாளும் எங்களது வீட்டிற்கு பக்கத்தில் வந்தது. பக்கத்தில் உள்ள வளவிற்குள் வந்ததும் அதற்கு நெருப்புப் பந்தல் கட்டி போட்டும் கூட செல்லவில்லை. கடைசியாக யாராவது ஒரு மனிதனை யானை தாக்கினால் மக்கள் யானையுடன் சண்டையிட மாடட்டார்கள். மின் விளக்கு போட முடியாத உப தவிசாளராக ஏன்? இருக்கின்றீர்கள் என்றுதான் கேட்பார்கள்.

எனவே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது போன்று நானும் 38 மின்விளக்குள் பொருத்தித்தரும்படி கேட்டேன். நீங்கள் வளத்தாப்பிட்டியில் 38 மின்விளக்குகளா என்று ஆச்சரியப்படலாம். ஆனால் வளத்தாப்பிட்டி சம்மாந்துறையின் அதிகமான வயல் பகுதிகள் இருக்கின்ற ஒரு பின்தங்கிய பிரதேசம். அதில் இஸ்மாயில் புரம், வளத்தாப்பிட்டி, புதிய வளத்தாப்பிட்டி, பளவெளி என்ற 04 பிரதேசம் உள்ளது. பளவெளி என்பது சிவன் கோவிலை அண்டிய பிரதேசம். யானை வந்து அங்குள்ள காட்டுப்பகுதியில் தங்கியிருக்கின்றது. அங்கு மின்விளக்குகளே இல்லை. அதற்கு 12 மின்விளக்குகளும், இஸ்மாயில் புரத்திற்கு 08, பளவெளிக்கு 10 மின்விளக்குகள் என்ற அடிப்படையில்தான் நான் மின்விளக்குகளைக் கேட்டேன்.

இதற்கு முதல் எமது கிராமத்தில் RDS உம் ஒரு வீதியில் எத்தனை மின் விளக்குகள் இருக்கின்றது. அதில் எந்த இடத்தில் மின்விளக்கு பொருத்தப்பட்டிருக்கின்றது. எந்த இடத்தில் மின் விளக்கு பொருத்தப்படவில்லை. என்ற தகவல்களை அவர்கள் ஒவ்வொரு ஏரியாவிற்கும் பட்டியல் தயாரித்துத் தந்திருக்கின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள் எங்களிடம் வேலை வாங்குகின்றீர்கள் ஆனால் எங்களுக்கு மின் விளக்குகள் பொருத்தித்தருகின்றீர்கள் இல்லை என்று கூறினார்கள். அதில் வனவிலாக்கா காரியாலயம் வளத்தாப்பிட்டி பிள்ளையார் கோவில் இருக்கின்ற பொதுக் கட்டடத்தில் இருக்கின்றது. அவர்கள் அங்கு இருப்பதால் மக்களுக்கு அசௌகரியம் என்பதனால் அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தி வேறு ஒரு இடத்தில் வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கடிதம் அனுப்பினோம்,

மக்கள் யானைத்தாக்கம் பற்றி அவர்களிடம் கூறப்போனால் அதில் இருக்கின்ற ஊழியர்கள் ஜெயச்சந்திரனிடம் கூறுங்கள் அவர் பார்த்துக் கொள்வார் என்று கூறுகின்றார்கள். இவ்வாறு இருந்தால் நான் எனது கடமைகளை செய்யும் போது இயற்கை அனர்த்தம் ஒன்று ஏற்பட்டால் அதற்கு விமர்சனத்திற்கு உள்ளாகாமல் நாங்கள் வேலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் நானும் வேலை செய்து கொண்டிருக்கின்றேன். இதற்கு ஏனைய பிரதேசங்களைப் போல் பார்க்காமல் செயற்பட வேண்டும்.

இது சம்பந்தமாக மின்விளக்குகளுக்கு குழு ஒன்றை அமைத்து அவர்கள் தெளிவான பட்டியல் ஒன்றை தயாரித்து தந்தார்கள். அதனை நான் உங்களிடம் தந்தால் நீங்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் இதனைப் பார்த்து செய்யுங்கள் என்று கூறுகின்றீர்கள். அவர்களும் நானும் சென்று ஒவ்வொரு சந்தி சந்தியாக மின் விளக்குகள் பொருத்தும் இடங்களைப் பார்த்து தந்த போதும் அந்தப்பட்டியலை இங்கு வேலை செய்கின்ற ஒரு தொழிலாளியிடம் கொடுத்து இந்த மின்விளக்குகளை நீங்கள் பார்த்துவிட்டு பொருத்துங்கள் என்று கூறுகின்றீர்கள். ஒரு உப தவிசாளருக்குரிய மதிப்பு, தொழில்நுட்ப உத்தியோகத்தரினது மதிப்பு இழக்கப்படுகின்றது. இது மிக வேதனைக்குரிய விடயம். மஜீட் புரத்தில் ஒரு கனுக்கு ஒரு கனு மின்விளக்கு பொருத்தப்பட்டுள்ளது. நான் கேட்பது ஒரு கனு விட்டு ஒரு கனுதான். அவ்வாறு பொருத்துவது பின்னடைந்து செல்வதுதான் வேதனைக்குரிய விடயம். எனவே, அவைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள். நான் தவிசாளர் அவர்களை தவறாக குறிப்பிடவில்லை. இதனை விரைவு படுத்துங்கள். அதுமட்டுமல்ல எங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நேற்று இடம்பெற்ற அபிவிருத்தித் திட்டத்தினை கருத்தில் கொண்டவளாக அதில் வாகனத் தரிப்பிடம் செய்யலாம் என்று நீங்களும் சற்று முன்னர் கூறியிருந்தீர்கள். நாங்கள் எங்களது பிரதேச சபைக்கு வருமானத்தை திரட்டுவது முக்கிய விடயமாக காணப்படுகின்றது. ஏனென்றால் வைத்திய சாலையை எடுத்துக் கொண்டாலும் அதில் ஒரு வாகனத்தரிப்பிடம் இல்லாத பிரச்சினை இருக்கின்றது. அதன் முன் பிரதேச சபை மூலம் ஒரு வாகனத்தரிப்பிடம் அமைத்து அதனூடாக சபைக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அதே போன்று வங்கிகளுக்கும் செய்யலாம். அதிலும் அங்கும் இங்குமாக வாகனங்களை நிறுத்துவதனால் பாதைகளில் போக்கு வரத்திற்கு இடைஞ்சலாக இருக்கின்றது.

அதே போல், மல்கம்பிட்டி பள்ளிவாசல் அருகில் உள்ள வெளியிடம் ஒன்று காணப்படுகின்றது. அதில் நாங்கள் விளையாட்டு மைதானத்தை அமைத்து சனசமூக நிலையம் ஒன்றையும் நிறுவினால் சிறப்பாக இருக்கும் ஏனென்றால் அதிகமான மக்கள் தமது பொழுது போக்காக சமைத்து சாப்பிடுவதற்கு வயல் அருகிலும், பள்ளிவாசல்கள், வளவுகளுக்கும் சென்று சமைத்துச் சாப்பிடுகின்றார்கள். இந்த இடத்தை கவர்சியாக்கி அவ்விடத்தில் சமைத்து சாப்பிடுவதற்காக ஒரு நிலையத்தை உருவாக்கி, அதற்கு சமைக்ககூடிய பாத்திரங்களை வாங்கி வைத்து அதிலிருந்து வாடகைகளையும் இந்த சபைக்காக பெற்றுக் கொள்ளலாம். அதே போன்று அந்தக் கிராமம் விடுபட்ட கிராமமாக இருக்கின்றது. எனவே, இவ்வாறு செய்தால் மக்களும் அங்கு குடிவரக்கூடிய வாய்புக்களும் வரும் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பசார் வீதியில் நமது பராமரிப்பில் உள்ள சந்தை கட்டடம் மீண்டும் அவ்விடத்தில் வர இருப்பதனால் மின்விளக்குகள் பொருத்தப்பட்டது. அது மட்டுமல்ல அதில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் போதாது. எனவே எனது சொந்த செலவில் மின் விளக்குகள் வாங்கித் தருவதற்கு இருக்கின்றேன். அதனையும் பொருத்தித்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். அது மட்டுமல்ல எனது சொந்தப்பனத்தில் வாங்கித்ருகின்ற மின் விளக்குகள் எதிர்காலத்திலும் அவ்வாறே செய்வதற்கு உங்களது அனுமதியைக் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விளையாட்டுக் கட்டத் தொகுதி சம்மாந்துறை பிரதேச சபைக்கு உடமையாக்கப்படுவதற்கு நீங்கள் முயற்சித்ததற்கு கௌரவ உறுப்பினர்கள் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதோடு, சனசமூக நிலையங்கள் சம்பந்தமாக MP வீதியில் இருக்கின்ற கட்டடம் சம்பந்தமாகவும், MPCS வளவினை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற விளக்கத்தை தந்தால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம். சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு அனேகமான உறுப்பினர்கள் உங்களுக்கு முன்வைத்த கோரிக்கையானது தெருவிளக்கு சம்பந்தமானது. இதே பிரச்சினை எங்களது வட்டாரத்திலும் இருக்கின்றது. ஆனால் இன்னும் ஒரு சில வீதிகளில் தெருவிளக்குகள் இல்லை. ஒரு சில வீதிகளில் அடுக்கடுக்காக தெருவிளக்குகள் போடப்பட்டிருக்கின்றது. அதனை எதிர்காலத்தில் முறைப்படி ஒழுங்கு படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் செய்வதற்கு உறுப்பினர் என்ற வகையில் நான் சித்தமாக இருக்கின்றேன். ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அதற்கான ஊழியர்களை ஏற்பாடு செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஏற்கனவே சபை ஆரம்பித்த போது வைத்த கோரிக்கைதான். அதாவது மலையடிக் கிராமம் 04 இல் உள்ள சனசமூக நிலைய இடங்கள் தபால் நிலையம், சந்தைக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கோரிக்கைக்கு எந்தவிதமான தீர்ப்பும் கிடைக்க வில்லை. ஆனால் இப்போது அதில் ஏற்பட்ட பிரச்சினை என்னவென்றால் அந்த ஏரியாவில் ஒரு பொது நூலகம் இல்லாமல் உள்ளது. அந்த சந்தைக் கட்டத்தை பொது நூலகமாக தந்தால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். காரணம் செந்நெல் கிராமத்தில் இருக்கின்ற நூலகத்தை அங்கு உபயோகித்தால் மலையடிக் கிராமம் 04 இல் உள்ள மக்களுக்கும், வெட்டுக்காட்டுப் பகுதியில் உள்ள மக்களுக்கும் நூலகம் இல்லாமல் சிரமப்படுகின்றார்கள். சுளயஞ்சேனை மக்கள், 40 வீட்டுத் திட்ட மக்களும் இந்தப் பிரேரனையை தெரியப்படுத்தினார்கள்.

மக்களின் கருத்துக்களையும் பிரேரனையையும் கொண்டு கேட்டுக் கொள்வது, சந்தைக் கட்டடத்தை ஒரு பொது நூலகமாக ஏற்படுத்தித்தருவதற்கு நீங்கள் ஆவண செய்ய வேண்டும் என்றும் அதற்கான முழு ஒத்துழைப்பையும் நானும் வழங்குவேன் என்றும் தெரியப்படுத்துகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கியவனாக, நான் ஏறத்தாள 11 அமர்வுகளிலும் தெருலாம்புகள் பற்றி கூறியுள்ளேன். நான் மனவருத்தப்படுகின்ற விடயம் நீங்கள் அனைவரும் சபை செயற்படுவதில்லை என்ற கருத்தில் மிகவும் ஆக்ரோசமாக பேசுகின்றீர்கள். ஆனால் இந்த சபை இவ்வளவு காலமும் நிர்வகிக்கப்பட்டு இந்த சபைக்கு வருமானங்கள் எவ்வாறு வருகின்றது? எப்படி வருகின்றது? எவ்வாறு இந்தப் பகுதியில் இருந்து அதாவது காலையில் இருந்து மாலை வரைக்கும் இங்கேயே இருந்து இங்கேயே சாப்பிட்டு ஒரு கௌரவ தொழில் எவ்வாறு நடக்கின்றது என்று பார்க்க வேண்டும். நீங்கள் எவ்வாறு வேண்டுமானாலும் பேசலாம் ஆனால் தெருலாம்புகளை கொள்வனவு செய்வதற்கு எங்கிருந்து பணம் கிடைக்கின்றது? இன்று 21 வட்டாரங்களில் மட்டும்தான் வரி அறவீடு செய்யப்படுகின்றது. அந்த வகையில் வரியையும் உறுதியையும் வைத்துத்தான் இதனைப் பராமரிக்க வேண்டும்.

கௌரவ உறுப்பினர்கள் மதிக்கப்படுவதில்லை என்று கூறுகின்றீர்கள். ஆனால் நான் அவ்வாறு நடக்கவில்லை. நான் நிர்வாகமும் செய்ய வேண்டும். நீங்கள் கொண்டு வருகின்றவற்றை உடனடியாக செயற்படுத்த முடியாது. ஏனென்றால் அவைகளை பார்வையிட வேண்டும். அதே நேரம் மக்களையும் திருப்திப்படுத்த வேண்டும். இதனை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். யானை வருகின்றது மின்விளக்கு போட வேண்டும் என்று கூறுகின்றீர்கள் அதே உரையில் நெருப்புப் பந்தல் இட்டும் யானை போகின்றதில்லை என்றும் கூறுகின்றீர்கள். எனவே அங்கு மின்விளக்கு ஒரு பிரச்சினையில்லை. ஆனால் நிச்சயமாக அங்கு வெளிச்சம் இருக்கத்தான் வேண்டும். அதற்காக அவைகளை ஒழுங்கு படுத்த வேண்டும்.

நிர்வாகம் என்பது தேவைகளை முன்னிலைப்படுத்தி கண்டிபாக செய்ய வேண்டும். நான் 02 மாத காலமாக மின்விளக்குகளை பொருத்துவதற்கு அனுமதி வழங்கவில்லை காரணம், சென்ற மாதத்திற்கான மீதி பொருட் பதிவேட்டுப் பிரச்சினைகள் இருந்தது. இந்த வருட வரவு செலவுத் திட்டத்திற்குரிய பொருட்கள் சென்ற கிழமைதான் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இன்று 30

வட்டாரங்களில் இருந்து எந்த வருமானமும் வருவதில்லை ஆனால் நாம் அவைகளையும் பராமரிக்கின்றோம். குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். நான் பாரபட்சம் இல்லாமல்தான் செய்து வருகின்றேன். அவைகளை நீங்கள் மனதிற்குள் எடுத்து உரையாற்றுகின்ற போது கவனமாக சொற்பாவனைகளை யோசித்துக் கூறுங்கள்.

வியாபார அனுமதிப்பத்திரம் தொடர்பான வர்தமானி பத்திரிகை விளம்பரம் ஒவ்வொரு வருடமும் நாம் வர்தமானியில் பிரசுரிக்க வேண்டும். இது நடைமுறையில் இருக்கின்றது.

**தீர்மானம் 03**

2019 ஆம் வருடத்தின் பொருட்டு, வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக குறிப்பிடப்பட்ட வியாபரங்களில் இருந்து உரிமைக்கட்டணமும் அல்லது வரியும் விளம்பரக் கட்டணமும் சம்மாந்துறை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் 2019 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதியிலிருந்து விதித்து அறவீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 01 ஆம் திகதிக்கு முதல் செலுத்தப்பட வேண்டும் என்றும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம். சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சேலை வரி 22 வட்டாரங்கள் வர்தமாணியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஓய்வு பெற்ற ஜனாப். றசூல் வருமான பரிசோதகரை உபயோகித்து அந்தக் குழுவுடன் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இதில் உள்ள பிரச்சினை வரி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் செயற்படுத்துவதற்கு ஆட்கள் இல்லாமல் உள்ளது. எனவே Contract அடிப்படையில் ஆட்களை எடுத்து செயற்படுத்துவதற்கு அவர்கள் சபையயின் அங்கீகாரத்தை கேட்கின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, வருமானம் வருவதென்றால் வரி அறவீட்டால்தான் இருக்கின்றது. சென்ற சபைகளிலும்கூட இது சம்பந்தமாக கூறியிருக்கின்றேன். நாம் அனைவரும் எல்லாவற்றையும் கேட்கின்றோம். ஆனால் சில ஏரியாவில் எந்த வருமானமும் இல்லை. அவர்களுக்கு தேவைகள் அதிகமாக இருக்கின்றது. எனவே நாம் வருமானம் உள்ள இடத்தில் இவைகளைச் செய்கின்ற போது வருமானம் பெறாதவர்களையும் கவனிக்க வேண்டும். மிகவும் தெளிவாக தெரிகின்றது 22 வட்டாரத்தில் வருமானத்தை எடுத்து 51 பிரிவுகளுக்கும் செய்வதென்றால் சனத் தொகையையும் நிலப்பரப்பையும் பார்க்கும் போது அறவிடும் தொகை போதாது. அதிகமானவர்கள் வெளியில் இருக்கின்றார்கள். இதற்கு தவிசாளர் மாத்திரம் பொறுப்பாக இருக்க முடியாது. நாங்களும் சபைக்கு எவ்வளவு வருமானம் வருகின்றது என்பதனையும் பார்க்க வேண்டும். சம்மாந்துறையில் இன்னும் வருமானத்தை கூட்டி எடுக்க வேண்டும்.

சம்மாந்துறை பிரதேச சபையை 02 சபையாக பிரிக்க வேண்டும். என்ற எண்ணத்தில் இருப்பவர்கள் அங்குள்ள கிராமங்களையும் வளப்படுத்தி விட்டுதான் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இவைகளைச் செய்கின்றோம். அதற்கு நீங்கள் ஒரு தாயாக இருந்து சபையை வழிநடாத்த வேண்டும்.

**தீர்மானம் 04**

வரி மதிப்பீட்டுத் திணைக்களத்தில் வரி மதிப்பீட்டாளர்களாக சித்தியடைந்து, இன்னும் நியமனம் கிடைக்காதவர்களைப் பயன்படுத்தி புதிதாக சோலை வரி அடையாளப்படுத்தப்பட்ட 22 கிராம சேவையாளர் பிரிவிற்கும் வரி மதிப்பீட்டு பணிகளைத் துரிதப்படுத்துவதற்கும் குறித்த திணைக்களத்தினால் நிர்னயிக்கப்பட்ட கொடுப்பனவை அவர்களுக்கு வழங்கவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

திண்மக்கழிவு முகாமைத்துவத்தில் நான் ஒவ்வொரு செயலமர்விற்கும் செல்கின்ற போது கற்றுக் கொண்ட பாடம் என்னவென்றால் இது பாடசாலையில் மாணவர்களுக்கு அந்த செயற்பாட்டை ஊக்குவித்து ஆரம்பித்தால்தான் வீடுகளில் செயற்படுத்தப்படும். இதற்கு ஒவ்வொரு பாடசாலைகளுக்கு 04 நிறத்திலான கழிவுக் கூடைகளை கொடுத்தால் சிறப்பாக இருக்கும். அதே நேரத்தில் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக மக்களுக்க அறிவூட்டுவதற்கான பிரசுரங்களையும் அச்சிட வேண்டும்.

**தீர்மானம் 05**

திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகளை வகைப்படுத்தும் செயன்முறையினை மாணவர் மத்தியில் அறிமுகப்படுத்துவதற்காக 04 நிறத்தினாலான கழிவுக் கூடைகளை பாடசாலைகளுக்கு வழங்கவும் அதனோடு சேர்த்து திண்மக் கழிவு முகாமைத்துவம் வகைப்படுத்தல் பற்றி மக்களுக்கு மாதாந்தம் அறிவூட்டுவதற்காக துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு மக்கள் மத்தியில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் கொடுத்து அதனை ஊக்குவிப்பதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பொது நிர்வாக சுற்றறிக்கை 29/2017 இற்கமைய காவலாளிகளுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பாக, என்னைப் பொறுத்தவரையில் ஒரு ஊழியர் வேலைக்கு அமர்த்தப்பட்டால் அவரின் மேலதிக நேரம் அதாவது 09 மணித்தியாலத்திற்கு மேலதிகமாக வேலை செய்திருந்தால் அதற்கு நாம் மேலதிக நேரம் கண்டிப்பாக வழங்க வேண்டும். சபை அங்கீகரித்தால் அனுமதி தேவையில்லை என்பது எனது அபிப்பிராயம். ஏனென்றால் சட்டத்தில் கிழமையில் ஒரு ஊழியர் 60 மனித்தியாலத்திற்கு மேல் வேலை வாங்க முடியாது. அதனால் இந்த சபையில் வேலை செய்கின்ற ஊழியர்கள் மேலதிகமாக செய்கின்ற காலத்திற்கு அதற்குரிய வேதனம் வழங்கப்பட வேண்டும்.

**தீர்மானம் 06**

பொது நிர்வாக சுற்றறிக்கை 29/2017 இற்கமைய காவலாளிகளாகக் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மேலதிகநேர கொடுப்பனவை வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பட்டன சபையினால் நமது ஊரில் சில வீடுகள் அமைக்கப்பட்டது. அதில் 03 வீடுகளைத் தவிர மற்றயவை அனைத்தும் உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த சுற்று நிருபத்தின்படி எஞ்சியிருக்கின்ற 03 வீடுகளையும் உரியவர்களுக்க்கு வழங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது சபையினால் அந்த ஏரியாவிற்குள் 02 அறை கடை கட்டப்பட்டுள்ளது. இது நமது சபைப்பணத்தினால் கட்டப்பட்ட கட்டடத்தில் வேறு எவரோ அனுபவிப்பது மாத்திரமல்லாமல் அதன் எல்லையும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதனால் சபைக்கு வருமானம் இல்லை. மக்கள் நடமாடக்கூடிய பாதைகளைத் தவிர மற்ற அனைத்தும் சபைக்குச் சொந்தமான இடம். அது நகர மத்தியில் இருக்கின்ற இடம். அந்த இடத்தை அவ்வாறே விடமுடியாது. நாம் மிக முக்கியமாக மத்தியில் இருக்கின்ற சொத்துக்களை கைநளுவ விடக்கூடாது. நாம் நமது? சபையில் இருக்கின்ற ஒற்றுமையைப் பயன்படுத்தி இவ்வாறான இடங்களை மீட்க வேண்டும். இல்லாவிட்டால் அதற்கான இளப்பீட்டை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அந்தக் கட்டடத்திற்கு அருகில் 02 பக்கத்திலும் 08 குடும்பம் வாழ்கின்றது. அதன் எல்லை விஸ்தீரனமாக்கப்படுகின்றது. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயம் சார்பாக, சென்ற சபையில் சட்ட நடவடிக்கை எடுத்தோம். ஆனால் அந்தக் காணி அரச காணி. பட்டன சபையினால் வீடுகள் கட்டப்பட்டு சிறுவர் பூங்காவிற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட காணி. ஒருவர் அத்துமீறி அதனை மஜீட் MP தான் தந்தார் என்று கூறி அதில் குடியேறி வசிக்கின்றார். மீண்டும் இப்றாஹீம் தவிசாளரின் காலத்தில் சபை ஏதோ ஒரு உடண்பாட்டுடன் கடைகளைக் கட்டி முடிந்தவுடன் அதில் இருந்தவர்கள் வழக்குத் தொடர்ந்து அதற்கு ஒரு முடிவில்லாத தீர்வாக வழங்கியது. அதாவரு இது அரச காணி என்றும் இதன் உரிமை சபைக்குத்தான் என்றும் உறுதிப்படுத்தவில்லை.

ஆனால் அதனை கைவிட முடியாது என்பதில் நானும் உடன்பாடு. சென்ற கிழமைதான் நான் செயலாளரிடம் பழைய ஆவணங்களை எடுத்து ஒரு நீதிபதியிடம் கொடுத்து அதனை இந்த மாதத்திற்குள் மீண்டும் அந்த வழக்கை நீதி மன்றத்திற்கு கொண்டு போக வேண்டும் என்று ஆணையிட்டுள்ளேன். ஏனென்றால் அந்தக் காலத்தில் 06,07 இலட்சம் செலவு செய்து சபையினால் கட்டப்பட்ட கட்டடம். ஆனால் யாரோ அனுபவிக்கின்றார்கள். இது சபையின் சொத்து நிச்சயமாக அடுத்த சபை அமர்வுக்கு முன் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**தீர்மானம் 07**
சேரி ஒழிப்புத் திட்ட சுற்றறிக்கை 1979/19 இற்கமைய 25 வீடுகள் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதன் பின்னர் 1981 இல் கட்டப்பட்ட 03 வீடுகள் இன்னும் உரியவர்களுக்கு உரிமை மாற்றி வழங்கப்படவில்லை. அவற்றினை மேற் குறிப்பிட்ட சுற்று நிருபத்திற்கமைய அவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய நிலுவைத் தொகைகளை அறவீடு செய்து அவைகளை உரிமையாளர்களுக்கு பாரம் கொடுப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மேலதிக நேர கொடுப்பனவு கொடுக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் இங்கு மேலதிக வேலை செய்வதற்கு ஆளணி பற்றாக்குறை இருப்பதனால்தான் கொடுக்க வேண்டி வரும். அந்த வகையில் ஆளணிப் பற்றாக்குறை இருக்கின்றதா? இருந்தால் ஏன் நிவர்த்தி செய்ய முடியாமல் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஆளணிப் பற்றாக்குறை இருக்கின்றது. இந்த சபையில் அனுமதிக்கப்பட்ட ஆளணி 69. சுகாதாரத் தொழிலாளி - 15, வேலைத் தொழிலாளி - 10 அனைத்தும் சேந்து 25 தொழிலாளிகள் தான். இன்று நாம் 80 ஊழியர்களுக்கு கொடுப்பனவு கொடுத்து வருகின்றோம். அதுவும் கானாமல் உள்ளது. நாங்கள் உருவாக்கிய ஆளணியில் சபையை சரியாக நடாத்துவதானால் 168 இற்கு மேல் ஊழியர்கள் தேவைப்படுகின்றார்கள். ஆனால் அதனை நாம் எடுக்க முடியாது. காரணம் கொடுப்பனவு வழங்க வேண்டும். நேற்று அமைச்சின் செயலாளரிடம் பேசும் போது உள்ளூராட்சி ஆணையாளர் கூறினார் முகாமைத்துவ உதவியாளர் திணைக்களத்தின் கீழ் நிதிப் பிரிவு உள்ளது. அவர்கள்தான் ஆளணிக்கு அனுமதி வழங்குவதற்காகவும் அதனை வைத்துத்தான் அவர்கள் வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதாகவும் குறிப்பிட்டார். இன்னும் 05 வருடங்களுக்கு ஆளணி கூட்டுவது நடைபெறாது என்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அவ்வாறானால் எங்களால் சபையை சீராக நடாத்த முடியாது என்று நான் கூறினேன்.

உதாரணமாக நான் கூறினேன், சம்மாந்துறையில் வரி வருமானம் அறவீடு பற்றி போசுகின்றோம். பிரதேச செயலகத்தின் தகவலின்படி சம்மாந்துறை வாழ் 50 வீதமான மக்கள் சமுர்த்தி லாபிகள் அவ்வாறானால் அக்குடும்பங்களில் இருந்து நாம் எவ்வாறு வரி அறவிடுவது? என்ற கேள்வியைக் கேட்டதும், செயலாளர் அவர்கள் அப்படியா? என்றார். சம்மாந்துறையின் தவிசாளராக இந்தப் பிரேரனை செய்வதற்கு நான் வெட்கமடைகின்றேன். 24,000 ஏக்கர் வேளான்மை செய்கின்றோம் ஆனால் இதில் உண்மையாக 50 வீதமான மக்கள் சமுர்த்தலாபிகள். அந்த சவால் இருக்கின்றது. அது தேசிய ரீதியிலும் மாகாண ரீதியிலும் எமது சபையினாலும் எவ்வாறு அதனை செய்யலாம் என்ற தீர்மானத்திற்கு வர வேண்டும்.

காவலாளிகள் ஆளணி 08 நமது சபைக்குத் தேவை 12 பதிலீட்டு தொழிலாளர்களையும் காவலாளியாக போட்டுள்ளோம். அவர்கள் 12 மணித்தியாலம் வேலை செய்ய வேண்டும். அவர்களுக்குத்தான் மேலதிக நேரக் கொடுப்பனவு. வேலை செய்யுமாறு திணிக்கப்படுகின்ற போது அவர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு வழங்க வேண்டும். 100க்கும் மேற்பட்ட பதிலீட்டு ஊழியர்களின் குடும்பங்கள் எமது கொடுப்பனவினால் வாழ்ந்து வருகின்றது. இதற்கு எவ்வாறு பணம் வருகின்றதென்று எவராவது கேட்டுள்ளீர்களா? அதற்குத்தான் நாங்கள் சென்ற சபையில் பணம் வைத்திருந்தோம். இதில் நாங்கள் பெருமைப்படுகிற்றோம். அதனால்தான் அந்தக் குடும்பங்கள் வாழ்கின்றது. இந்தவிடயத்தில் தெருலாம்பு பொருத்துவதை விட மிக முக்கியமானது ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதுதான். இவைகள் அனைத்தையும் பார்த்துத்தான் செயற்பட வேண்டும். இவைகளை நீங்கள் சிந்திப்பதில்லை.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சமுர்த்தி பெறும் மக்களிடம் வரி அறவீடு செய்ய முடியாது. என்று கூறப்படுகின்றது. அன்மையில் சமுர்த்தி கூட்டம் ஒன்றிற்கு சமூகமளித்த போது அங்கு கோடிக்கனக்கில் சேமித்திருப்பதாக கூறினார்கள். அவ்வாறானால் அவர்கள் சமுர்தி பெறும் குடும்பம் என்று ஏன் கருத வேண்டும். நாமும் அதற்குரிய வரியை அறவீடு செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு வறுமை ஒழிப்புத் திட்டம் என்று 03 மாதத்திற்கு ஒருமுறை 1000 ரூபா பணத்தை கொடுத்து மாதம் 1000,2000 ரூபா வீதம் சுதந்திர தினம் போன்ற பல நிகழ்வுகளுக்கு அறவிட்டு மக்களாலேயே வட்டியை மேற்பெருக்கி சமுர்தி வங்கியில் கோடிக்கனக்கில் சேமிக்கின்றனர். இது வறுமை ஒழிப்பா? அல்லதுவட்டியை உருவாக்கும் இடமா? நாமும் அவர்களிடம் வரி அறவிடுவதில் கரிசனை காட்ட வேண்டும். இது பற்றி எழுத்து மூலமான ஒரு கடிதத்தைக் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால்தான் மக்களும் சமுர்தியில் இருந்து விடுபடுவார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
என்னைப் பொறுத்தவரையில் சமுர்த்தித்திட்டம் சீரான முறையில் இடம்பெற வில்லை. இதற்கு பல உதாரணங்களையும் கூறலாம். கல் வீடு, காணி பேன்றவைகள் இருப்பவர்களும் சமுர்தி பெறுகின்றார்கள். ஆனால் அவைகள் அனைத்தும் அவர்களின் பெயர்களில் இல்லை. அதிகமான

சமுர்தி பெண்களின் பெர்களிளேயே பதியப்பட்டுள்ளது. கண்டிப்பாக அவை ஆண்களின் பெயரில் மாற வேண்டும். ஆனால் சட்ட ரீதியாகப் பார்த்தால் இவ்வாறான பிரச்சினை வருகின்றது. நடைமுறையில் நீங்கள் கூறுவது சரியகத்தான் இருக்கின்றது. தகுதியில்லாதவர்கள் சமுர்தி பெறுகின்றனர். அதனால் இந்தப் பிரச்சினை வருகின்றது. எனக்கு இருந்த சவால் பிழையாக சமுர்தி பெறுபவர்கள் அரசியல் காரணங்களுக்காக நாம் கண்மூடித்தனமாக இருப்பது ஏழை மக்களுக்கு செய்கின்ற பாவம். இதனால் உண்மையாக சமுர்தி பெற வேண்டியவர்கள் ஆயிரக்கணக்கில் பட்டியலில் இருக்கினறார்கள். நமக்கு கெட்ட பெயர் வரும் என்பதனால் யாரும் கவனத்தில் கொள்வதில்லை. ஆனால் நான் பகிரங்கமாக கதைத்து வருகின்றேன்.

**தீர்மானம் 08**

இழுவைப் பெட்டி (RV - 6875) திருத்தம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 09**

Ra - 0258 Tractor இன் முன் பின் டயர் மாற்றம் செய்வதற்கும், 46 - 4180 இழுவைப் பெட்டியின் டயர், ரியூப், மப்ளர் போன்றவற்றை மாற்றம் செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கெள்கலத்திற்கு சென்ற போது மாடுகளின் கழிவுகளை Compostingக்கு நேரடியாக கொடுக்கின்றார்கள் அதில் சில கழிவுகள் மண் வருகின்றதனால் அவைகள் வேறாக்கப்படுகின்றது. ஆனால் அதனை 10 அல்லது 20 அடிக்கு முழுமையாக கொங்றீட் செய்தால் முழுமையாக மன் இல்லாமல் இருக்கும் அதே போல் மற்றப்பக்கமும் 05 அடிக்கு கொங்றீட் இட்டால் முழுமையாக Composting க்கு வாய்ப்பாக இருக்கும்.

இன்னுமொரு விடயம் என்னவென்றால் முன்னர் கடமையாற்றிய சந்தை மேற்பார்வையாளர் ஜனாப்.றசீட் என்பவர் ஒவ்வொரு மாதமும் சந்தையில் உள்ள கடைகளில் பணம் அறவிட்டு வந்ததாகவும் தற்போது அந்த மாதம் அறவிடாமல் அடுத்த மாதத்தில் வரும் போது அந்தச் சுமை அதிகரிப்பதாகவும், செயலாளரிடம் பேசி உடனடியக ஆட்களைப் போட்டு அதனைச் செய்யுமாறும் நான் சந்தைக்குச் சென்ற நேரம் அங்குள்ளவர்கள் என்னிடம் கூறினார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் இவ்வாறு செயற்பட்டதையிட்டு நான் உண்மையில் மகிழ்சியடைகின்றேன். இவைகள்தான் உங்களது பங்களிப்புக்கள். நிர்வாக ரீதியாக செயற்படுவதற்கும், அங்கு சென்று பயனாளிகளை நேரடியாகப் பார்ப்பதற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. இறைச்சிக் கடைகளில் இருந்துதான் நமக்கு அதிகமான வருமானம் வருகின்றது. ஆனால் நாம் அதில் குறைவாகத்தான் கவனம் செலுத்துகின்றோம். காரணம் அந்த வியாபாரத்தின் இயல்பு.

**தீர்மானம் 10**

புதிதாக எமக்கு வழங்கப்பட்ட Compactor இனுல் கழிவுகளை Tractor மூலம் கொட்டுவதற்குரிய மேடை (Tramp) ஒன்றினை Compost Yard இல் அமைப்பதோடு, அலுவலக கட்டட வேலைகளைப் பூர்தி செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**தீர்மானம் 11**

காரைதீவிற்கு திண்மக்கழிவு நிலையத்திற்கு திண்மக்கழிவினை வழங்குவதற்கு மீண்டும் 03 மாத காலத்திற்கு நீடிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

உப தவிசாளர் அவர்களுக்கு அரசாங்க சுற்று நிருபத்தின் படி அவரது தொலைபேசிக் கட்டனம் குறிப்பிட்ட தொகைக்குள் மீளளிப்பு பெறக்கூடிய வகையில் ஒரு வரப்பிரசாதம் இருக்கின்றது. அந்தக் கொடுப்பனவை நாம் அவருக்கு வழங்க வேண்டும்.

**தீர்மானம் 12**

எமது சபையின் கௌரவ உப தவிசாளர் அவர்களுக்கு அரசாங்க சுற்று நிரூபத்திற்கமைய தொலை பேசி கொடுப்பனவாக 3500 ரூபாவினை மீளளிப்பு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

மல்வத்தை சந்தையில் உள்ள கடைகளுக்கு மின் இணைப்புக்கள் இல்லை. அதற்கு மின் இணைப்புக் கோருகின்றார்கள். மின் இணைப்புக்கள் எந்த அடிப்படையில் வழங்குகின்றோம் என்றால் சபையினால் எடுத்து வழங்கப்படுவதானால் அதற்குரிய முற்கொடுப்பனவு ஒவ்வொரு கடைக்குரியவர்களும் செலுத்த வேண்டும். காரணம் மின் இணைப்பு சபையின் பெயரில் இருக்கும். கணக்காய்வுக்கு வராமல் பாதுகாப்புக்காக அனைத்து சந்தைகளிலும் முற் கொடுகப்பனவு 20,000 செலுத்தினால் சபையின் பெயரில் எடுத்துக் கொடுக்கப்படும். அவர்கள் அந்தக் கடையை விடும் போது அந்தப் பணம் மீண்டும் வழங்கப்படும். இல்லாவிட்டால் அவர்களின் பெயரில் எடுக்கலாம் அவர்கள் செல்லும் போது அதனைத் துண்டித்து விட்டுச் செல்லலாம் ஏனென்றால் சபைக்கு உத்தரவாதம் வேண்டும். இது சபையின் கட்டடங்கள் அனைத்திற்கும் இவ்வாறே செயற்படுத்தப்படும்.

**தீர்மானம் 13**

மல்வத்தை சந்தை மற்றும் சந்தியில் உள்ள கடையறைகளுக்கு முற்கொடுப்பனவு 10,000 ரூபா வை செலுத்துபவர்களுக்கு சபையின் பெயரில் மின் இணைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற மாத செலவீனம், அதில் உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் கேட்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 05 வது வாகனத்திருத்தம் பொருட் கொள்வனவில் ZA5277 JCB யின் Starter Moter தெளிவில்லாமல் உள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் Starter Moter 03 பொருட்களுக்குரிய தொகைதான் இது. இதில் சுவிச் தனியாக வருவதில்லை. அதனால் 03ம் சேர்த்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

**தீர்மானம் 14**
சென்ற மாதம் 2019.01.01 தொடக்கம் 2019.01.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பிரதேச நீர்பாசன திணைக்களத்தில் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளது. அதாவது S20 வாய்காலை அண்டிய ஒதுக்குக் காணிகளை வேலியிட்டு, பயிர்கள் நட்டு கட்டுமான வேலைகளையும் மேற்கொண்டுள்ளார்கள் என்பதனை எங்களால் அவதானிக்கப்பட்டுள்ளது. இது சட்டவிரோதமான செயலாகும். இவ்விடயம் தொடர்பாக எதிர்வரும் 2019.02.14 ஆம் திகதி காலை 10 மணிக்கு பிரதேச நீர்பாசன பொறியியலாளர் காரியாலயத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாம் ஆரம்பத்தில் இருந்து S வாய்கால் பிரச்சினை அத்துமீறப்படுகின்றது என்று கூறுகின்றோம். இதில் வீரமுனை வட்டாரம், மல்கம்பிட்டி வட்டாரம், மலையடி வட்டாரம், விளினையடி வட்டாரம் அனைத்துக்கும் சொந்தமானதுதான் S வாய்கால். இதில் உள்ள அங்கத்தவர்கள் தயவு செய்து அந்தக் கலந்துரையாடலுக்கு செல்லுங்கள். நமது நிலைப்பாடு சட்ட விரோதமான விடயங்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் றிசவேசன் இருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, S15, இல் ஒரு நபர் வேளான்மை செய்தார் ஆனால் அதற்கு பேமிட்டும் வாங்கியுள்ளாரகள். அவருக்கு எவ்வாறு பேமிட் வழங்க முடியும்? இதே போன்று S 20, 22,23 றிசவேசன் மத்தியில் இருக்கின்றது. அதே போல் அஸ்ஸமா பாடசாலை வளவினை 05 பேர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றார்கள். சுததந்திர தினத்தன்று மக்கள் அனைவரும் வந்து சிரமதானம் செய்தார்கள். ஆனால் முடியாமல் இருக்கின்றது. கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களுக்கும் இது பற்றித் தெரியும். இதற்கு சபையினால் வகனங்களைத் தந்தாவது சிரமதானம் செய்து அதன் எல்லையையிட்டால் அதன் பின் எங்களது செலவில் நாங்கள் தூனிட்டு எல்லையைப் பலப்படுத்தலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதன் பாரதூரம் மக்களுக்கு விளங்குவதில்லை. நாம் பிறந்து வளர்ந்த காலத்தில் நமது ஊர் மிகவும் செளிப்பாக இருந்தது. இன்று இவ்வாறு சீரற்றுப் போவதற்குக் காரணம் நாம்தான். பொது வரம்பில் இருந்து வட்டை வீதியிலும் ஒரு இஞ்சி அளவுக்கும் சண்டையிட்டுத்தான் இருக்கின்றோம்.

இதற்கு அரச சொத்துக்களைப் பாதுகாப்பது நமது கடமை. ஒவ்வொரு அங்கத்தவர்களின் கடமையும்தான். நமக்காக இல்லை என்றாலும் நமது எதிர்கால சந்திகளுக்காக பாதுகாக்க வேண்டும். எனவே தயவு செய்து இந்த கலந்துரையாடலுக்கு சமூகமளியுங்கள்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அஸ்ஸமா பிரச்சினை தொடர்பாக, அப்பாடசாலைவயின் அதிபரின் வேண்டு கோளுக்கினங்க அங்கு சமூகமளித்தேன். 05 குடும்பங்கள் இருக்கும் நிலம் நாம் பூங்கா அமைப்பதற்கு எடுத்திருக்கின்ற நிலத்திற்குரியதாகும். இவ் 05 குடும்பங்கள் அங்கு அத்துமீறி இருப்பதற்கு கிராம சேவகரின் ஒத்துழைப்புதான் என்பது விளங்குகின்றது.

பிதேச செயலாளரையும், வலயக் கல்விப் பணிப்பாளரையும் தொடர்பு கொண்டு அதனை எழுத்துமூலம் எடுத்துவிட்டுத்தான் பொது மக்களையும் அழைத்துக் கொண்டு அந்த இடத்திற்கு சென்ற நேரம் அந்த வேலியை நடுவதற்கு மிகவும் சிரமமாக இருந்தது. இப்போது வேலியிட்டு தூண் நாட்டப்பட்டுள்ளது. நீர்பாசனத் திணைக்கள பொறயியலாளரிடம் இயந்திரம் கேட்டுள்ளேன். அவர் தருவதாக கூறியுள்ளார். பின்னால் உள்ள நிலம் அரச காணி என்பதனைக் கூறியும் மக்கள் அதனை விலை கொடுத்து வாங்கியுள்ளார்கள். அந்த இடத்தில் ஒரு Clinic Center அமைப்பதற்கு ஆவண செய்ய வேண்டும். கௌரவ உறுப்பினர் கேட்பது போல் முடியுமான உதவிகள் அதாவது அதற்குரிய எரிபொருள் செலவை நாங்கள் தருகின்றோம். வாகனங்களைத் தந்து உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதனை நாம் பல முறை கூறியிருக்கின்றோம். S20 வாய்காலை எங்களிடம் கேட்டு கடிதம் கொடுத்துள்ளோம். இதன் பிழை என்னவென்றால் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்து அவர்கள் தடுக்க வில்லை. கல்லோயா திட்டத்தின் மூலம் 20 வீட்டுத் திட்டம் கட்டிக் கொடுக்கப்பட்டது. யாரும் தனிப்பட்ட முறையில் மையவாடிக்கு நிலத்தினை கௌரவ முன்னால் மர்ஹூம் அப்துல் மஜீட் அவர்கள் வர்தமானியில் பிரசுரித்தார். பிரதேச செயலாரிடம் கூறி அந்த வர்த்தமாணியை எடுத்தால் யாருமே அதற்குள் எந்த விதத்திலும் நுளைய முடியாது.

அஸ்ஸமா பாடசாலை உள்ள காணிகள் மிகவும் பெறுமதி வாய்ந்த விலை உயர்ந்த காணிகள். அவ்விடத்தை மக்களிடம் இருந்து பாதுகாக்கப்பட வேண்டிய விதத்தில் இருக்கின்றது. அதனை சரியான முறையில் வளப்படுத்தி வளமிக்க பாடசாலைகளாக மாற்றுவதற்கு இடமும் வேண்டும். அதற்கு JCB, Tractor ஐக் கொடுத்து எல்லையைப் பெற வேண்டும். அதே போன்று நீதி மன்றத்திற்கு அருகில் உள்ள நமது சபைக்குச் சொந்தமான இடத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும். பிரதேச சபைச் சட்டம் என்று மக்களுக்க ஒரு பயஉணர்வு வர வேண்டும். அப்போதுதான் பிரதேச சபைக்கு கட்டுப்பட்டு மக்கள் நடப்பார்கள்.

சில இடங்களில் தெருலாம்புக்கள் சரியான முறையில் உரிய நேரத்திற்கு அனைக்கப்படுவதில்லை. தற்போது சென்று பார்த்தாலும் அவைகள் வேலை செய்து கொண்டிருக்கும். இதில் நாம் பொறுப்பாக இருக்க வேண்டும். எனவே, நாம் அனைவரும் ஒருமித்து உழைக்க வேண்டும் என்பதுதான் நான் சபையில் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மையவாடி போன்ற பொது இடங்கள் ஊரின் மையமாக மாற வேண்டும் என்பதற்காகத்தான் சுதந்திர தினத்தை அங்கு நடாத்தினோம். நிச்சயமாக இந்த காலகட்டத்தில் அவ்வாறான ஏரியாக்களுக்குத்தான் முன்னுரிமை வழங்க வேண்டும். வீரமுனை, மல்கம்பிட்டி, மலையடி, விளினையடி போன்ற வட்டாரங்களை முன்னுரிமைப்படுத்தித்தான் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அரச காணி விடயங்களில் நீங்கள் அனைவரும் மக்களின் பிரதிநிதியாக மக்களின் சொத்தைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

## கௌரவ உறுப்பினர்களின் மனுக்கள் / பிரேரணைகள்

### கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, பிரதேசத்தின் முதல் குடிமகனாகிய நீங்கள் இந்த சபைக்குச் செய்த அற்பனிப்புகளை நாங்கள் ஒரு போதும் குறைத்து மதிப்பிட வில்லை.உண்மையில் நீங்கள் இங்கு சேவை செய்து கொண்டிருக்கின்றீர்கள். அதற்காக மகிழ்ச்சியடைகின்றோம்.

எதிர்வரும் மார்ச் 08 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் இடம்பெற உள்ளது. அதிகமாக பெண்களை எந்த நிகழ்வுகளிலும் கௌரவப்படுத்துவது குறைவு. அந்த வகையில் அதனை எமது வட்டாரங்களுக்குள் மகளிர் தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்து அந்தப் பிரதேசத்தில் சேவையாற்றியவர்களை கௌரவிக்க வேண்டும் என்ற வகையில் வளத்தாப்பிட்டியில் செய்வதற்கு உத்தேசித்துள்ளேன். அனைத்து உறுப்பினர்களினதும் பங்களிப்பும், இந்த சபையின் அனுசரனையும் வழங்க வேண்டும். இதே போன்று அனைத்து வட்டாரங்களிலும் இடம்பெற வேண்டும். என்பது எனது விருப்பம். அந்த நிகழ்வுகளை மேற்கொண்டு அதன் இறுதி நிகழ்வை மார்ச் மாதம் நடுப்பகுதியில் எமது அப்துல் மஜீட் மண்டபத்தில் நடாத்தினால் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அந்தவகையில் எமது வளத்தாப்பிட்டியில் இடம்பெறும் நிகழ்வானது காலை 09 மணி முதல் மாலை 04 மணிவரை (கலை நிகழ்சிகள் உட்பட) நடாத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றது. அதற்கான செலவு 150,000 ரூபா செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஒரு சில செலவுகளுக்கு சபையூடாக பெற்றுத்தர வேண்டும் என்று நான் கருதுகின்றேன்.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

நீங்கள் சமர்ப்பித்த 72000 ரூபா செலவுத் தொகையை எமது வரவு செலவுத் திட்டத்தில் பெண்கள் ஊக்குவிப்பு ஒதுக்கீட்டில் உள்ளதை மீளாய்வுக்குட்படுத்தி செய்வதற்கு செயலாளருடன் கலந்துரையாடி பெற்றுக் கொள்வதற்கு சபை அங்கீகாரம் வழங்குகின்றது.

### தீர்மானம் 15

சர்வ தேச மகளிர்தினத்தை முன்னிட்டு எதிர் வரும் 2019.03.08 ஆம் மல்வத்தையில் அதற்கான நிகழ்வுகளை நடாத்துவதற்கும், அதற்கான செலவீனத்தை வரவு செலவுத் திட்டத்தில் பெண்கள் ஊக்குவிப்பு ஒதுக்கீட்டில் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

### கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது மல்வத்தை பிரதேசத்தில் உப பொலிஸ் நிலையம் அல்லது பொலிஸ் காவலறன் அமைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனென்றால் மல்வத்தை பிரதேசம் வளர்ந்து வருகின்ற பிரதேசமாக இருந்தாலும், அந்தப்பிரதேசத்தில் தற்போது திருட்டுத்தனமான மணல் அகழ்வு நடவடிக்கை அதே போன்று திருடப்பட்ட மாடுகள் கொண்டு செல்லுதல், கஞ்சா போன்ற போதைப் பொருட்களை கடத்தல் போன்ற செயற்பாடுகளின் போது சிறு சிறு சண்டைகள் ஏற்படும் போது அந்தப் பிரச்சினைகளைத் தீர்பதற்கு அதிகமான காலங்கள் எடுக்கின்றது. ஆகவே மல்வத்தைச் சந்தியில் பொலிஸ்நிலயம் அமைப்பதானால் மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளக்கூடியதாகவும், அதற்கு மேலதிகமாக அங்கு இடம்பெறும் திருட்டு சூழலை கட்டுப்படுத்தக்கூடிய சூழலை உருவாக்க முடியும். என நான் கருதுகின்றேன். எனவே, இதனை ஒரு தீர்மானமாக எடுத்து பொலிஸ் மா அதிபருக்கு எமது பிரதேசத்தின் கோரிக்கையாக முன்னெடுக்க வேண்டும் என்பது எனது பிரேரனையாகும்.

**தீர்மானம் 16**
மல்வத்தை பிரதேசத்தில் உப பொலிஸ் நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்தப் பிரேரனையைப் பொறுத்தவரையில் மல்வத்தையில் ஒரு பொலிஸ் நிலயம் இருந்தது. மக்கள் அனைவரும் இணைந்து அது தேவையில்லை என்று அதனை அகற்றிவிட்டார்கள். ஊரில் நடக்கின்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மீண்டும் அவ்விடத்தில் வைப்பதானால் முதலில் பொருத்தமான இடத்தைத் தேட வேண்டும். இது 02 அங்கத்தவர்களின் பொறுப்பாகும்.

பிரதான இடத்தில் ஒரு காவல்நிலையம் வரும் போது வெவ்வேறு பிரச்சினைகள் வரலாம். நிச்சயமாக சம்மாந்துறை பொலிஸ் வலயம் மிகவும் பாரியது. அதாவது நிந்தவூர், காரைதீவு, சம்மாந்துறை என்ற 03 பிரதேச செயலக பிரிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதேநேரம் இம் 03 பிரிவுகளிலும் இடம்பெறுகின்ற பிரச்சினைகளுக்கு சம்மாந்துறை பொலிஸ் பொறுப்பாக இருக்கின்றது. சம்மாந்துறை பொலிஸ் பிரிக்கப்பட வேண்டும். மல்வத்தை வளத்தாப்பிட்டியை சார்ந்த பகுதியில் ஒரு காவல் நிலையம் உருவாக்கப்பட வேண்டும் என்ற பொதுத் தீர்மானமாக எடுக்கப்பட வேண்டும். ஒரு கட்டுப்பாடு இல்லாத பிரிவு என்பதனை நாம் உத்தியோக பூர்வமாக அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொலிஸ் விடயத்தில் நானும் ஒரு கூட்டத்திற்கு சென்ற போது அவதானித்த விடயம் என்னவென்றால் சட்டப்படி அங்கீகாரம் பெற்று காரை தீவிற்கு வந்துள்ளது. ஆனால் அவர்கள் அதற்கு இடம் கொடுக்கின்றார்கள் இல்லை. STF கேம்புக்குள் இடத்தை ஒதுக்கி கொடுக்கலாம் என்று நான் கூறிய போது அவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை.

நிந்தவூருக்கும் சட்டப்படி வந்தது. அதிகமான துஸ்பியோகங்கள் அங்குதான் நடைபெறுகின்றது. ஆனால் ஊடகங்களில் சம்மாந்துறையில் என்றுதான் கூறப்படுகின்றது. அதேபோல் வளத்தாப்பிட்டியிலும் இடம்பெறுகின்றது. ஆனால் அனைத்தும் சம்மாந்துறை என்றுதான் உச்சரிக்கப்படுக்கின்றது. காரைதீவில் விபுலானந்தரின் சிலைக்கும் கண்ணகி அம்மன் கோவிலுக்கும் நடுவில் தவறனை உள்ளது. அதனை நிறுத்தி ஒரு காவல் நிலையத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கு வருகின்ற ஒவ்வொரு பொலிஸ் பிரிவுதலைவருக்கும் விருப்பமில்லாமல் இருக்கின்றார்கள். எனவே, இந்த விடயத்தில் மிகவும் சந்தோசமாக சிறந்த இடத்தை தெரிவு செய்தால் நாம் இரவு வேளைகளிலும் பிரயானம் செய்வதற்கு பாதுகாப்பான முறை இருக்கும் முதலில் பொது இடத்தைப் பெற்று அதனை வர்த்தமானியில் பிரசுரித்து அவைகளைச் செய்ய வேண்டும். என்பது எனது தனிப்பட்ட முறையிலான அபிப்பிராயம்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை விடயம் தொடர்பாக, நான் அந்தப்பகுதியில் பழகியதனால் கூறுகின்றேன். ஏற்கனவே லோவுட கடை பள்ளிக்கு பின்னால் வள்ளுவர் புரத்தில் உள்ள மைதானத்தில் காவல் நிலையம் அமைப்பதற்குரிய திட்டங்கள் 2005 ஆம் ஆண்டு நானும் வட்டைத் தலைவர் என்ற ரீதியில் தலையிட்டு ஏற்பாடு செய்தோம். அதனை இங்குள்ள பெரும் புள்ளிகள் ஏற்கனவே திடலாக இருந்ததனை மண் போட்டு மைதானமாக்குவதற்கு திட்டமிட்டார்கள். அதனை எவ்வாறு செய்ய முடியும். அது வர்தமாணியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது மைதானமாக்கப்பட்டுள்ளதால் ஒன்றும் செய்ய முடியாது.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொலிஸ் அருகில் இருந்தால் அதனால் வருகின்ற அசௌளகரியங்களும் தெரிந்த விடயம்தான் ஆனால் அன்மைக்காலங்களில் பாடசாலை மட்டத்தில் மாவா என்ற நாடகம் இடம்பெற்றது அதில் மாவா பேசப்பட்டது. மாவா இந்தியாவில்தான் உள்ளது. இன்று அது பாடசாலை மட்டத்தில் பரிமாறப்படுகின்றது. பாடசாலைக்குச் செல்கின்ற மாணவர்கள் பெரியவர்களை அச்சுறுத்துகின்ற சூழ்நிலை காணப்படுகின்றது. அது மட்டுமல்ல அந்தச் சந்தியில் நின்று கொண்டு அவ்வளியால் செல்கின்ற பிள்ளைகளுக்கு சிரமத்தைக் கொடுக்கின்றார்கள். பொலிஸ் என்றால் பயப்படக்கூடிய பிள்ளைகள்தான் இவைகளைச் செய்கின்றார்கள். எனவே பொலிஸ் இருந்தால் ஏதோ ஒரு வகையில் பாதுகாப்பாக இருக்கும் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உப தவிசாளர் பேசியதற்கினங்க நான் சில கருத்துக்களைக் கூறுகின்றேன். 2019.02.06 ஆம் திகதி சம்மாந்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி இப்னு அசார் அவர்களது தலைமையில் சிவில் பாதுகாப்புக் குழு ஒன்று ஏற்படுத்திய கருத்தரங்கொன்று அல்அர்சத் பாடசாலையில் இடம்பெற்றது. அதில் அவர் கூறும் போது வளத்தாப்பிட்டியில் குடிப்பழக்கம் குறைந்து விட்டது.சம்மாந்தறையில் தான் தற்போது குடிப்பழக்கம் அதிகரிதித்துள்ளது என்று எமது கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறியதாக அவர் கூறினார். ஆனால் சாய்ந்தமருது, கல்முனை காரைதீவில் இருந்து மக்கள் வந்து அதிகமாக வெள்ளிக் கிழமைகளில் உப்புரி மலையில் வைத்து குடிக்கின்ற விடயம் உண்மை. காரைதீவு, மல்வத்தையில் காவல் நிலையம் அமைப்பதற்கு இடம் உள்ளது. ஆனால் அந்த ஏரியா மக்கள் உடன்படுகின்றார்களில்லை என்றும் கூறினார்.

தற்போதிருக்கின்ற பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவரது தனித் தொடர்பை மக்களுடன் ஏற்படுத்தியிருக்கின்றார். எனவே அதனூடாக எந்தளவு முன்னேற்றத்தைக் கொண்டு வர முடியுமோ அதனைக் கொண்டு வரலாம். காரைதீவில் உள்ள தவறனையை தடை செய்தாலும் அங்குள்ள மக்கள் கலாசார விழுமியங்களுக்காக எங்களுக்குத் தேவை என்று கூறுகின்றார்கள். எனவே இவைகளுக்கு மக்களின் அங்கீகாரம் தேவை. அனைத்து உறுப்பினர்களும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இப்னு அசார் அவர்களையும் அழைத்து இதற்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஆர். வளர்மதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளரின் முயற்சியினால் கொண்டு வரப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரம் தொடர்பான விடயம். அதாவது மல்வத்தை பிரதேசத்தில் இலங்கை வங்கி அமைந்துள்ள பிரதான வீதியில் நாற்திசை சந்தியில் மூவின மக்களுக்கும் பயன்மிக்கதாக மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று நிறுவுவதற்கு எமது பிரதேச சபையின் அனுமதியையும் உங்களின் அனுமதியையும் பெற்றுத் தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மணிக்கூட்டுக் கோபுரம் கண்டிப்பாக அவ்விடத்தில் வர வேண்டும். நாம் நகர திட்டமிடல் அமைச்சருக்கு சபை சார்பாக ஒரு மனு கொடுத்துப்பார்ப்போம். காரணம் அவர்கள்தான் இதனை செய்ய முடியும் அல்லது RDA வினால் முடியுமானால். கௌரவ உறுப்பினர் இன்பவதி, கௌரவ உறுப்பினர் யூசுப் லெவ்வை அவர்களிடம் கொடுக்கலாம்.

**தீர்மானம் 17**
மல்வத்தை பிரதேசத்தில் மணிக்கூட்டு கோபுரம் ஒன்றினை நிறுவுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை வட்டார உறுப்பினர் கௌரவ இன்பவதி அவர்கள் நகர திட்டமிடல் திட்டத்தினூடாக மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவொன்றை செய்துள்ளதாகவும் கூறியிருந்தார் அவ்வாறு கிடைக்குமானால் மிகவும் சந்தோசம் அத்துடன் இந்த முன்மொழிவுடன் மல்வத்தை சந்தைப் பிரச்சினை பற்றி கூறினேன் அவை இதில் இடம்பெறவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது நிர்வாகப் பிரச்சினை சந்தை கொந்தராத்துக் காரரையும் அழைத்து உறுப்பினர்களையும் அழைத்து நாம் பேச வேண்டும். காரணம் இங்கும் பாரிய பிரச்சினையாக வருகின்றது. எனவே, அடுத்த கிழமையில் ஒரு நாளை அதற்காக ஒதுக்கி கௌரவ உப தவிசாளர், உறுப்பினர்கள் 02 பேரும் நானும் சந்தைப் பிரதிநிதியையும் எடுத்து பேச வேண்டும். ஏனென்றால் அவர்கள் பேசுகின்ற முறை, அறவீடு செய்கின்ற முறை போன்றவைகள் நமது சபைக்கு அபகீர்தியை ஏற்படுத்துகின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று அதி உத்தம ஜனாதிபதி அவர்கள் புகழ்ந்து பேசிய அமைச்சர்தான் சஜித் பிரேமதாச அவர்கள். அவரது வீடமைப்புத் திட்டத்தின் மூலம் கிராமங்களையும் அம் மக்களையும் முன்னேற்றுகின்றார். அதன் அடிப்படையில் நான் மிகவும் சந்தோசப்படுகின்றேன். அன்மையில் ஏறாவூர் செல்கின்ற போது பாதைகளில் தமிழ் வரலாற்றின் அடையாளங்களை வெளிபடுத்தக்கூடிய பெயர்களைக் கொண்ட எழுச்சிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் எமது சம்மாந்துறையில் இன்று இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த போதிலும் அவ்வாறான எழுச்சிக் கிராமம் ஒன்றும் ஏற்படவிலலை என்பதனால் மிகவும் கவலையடைகின்றேன்.

அதற்கு நான் பல தடவைகள் கௌரவ அமைச்சர் சஜித் பிரேமதாசா அவர்களோடு மகாஓயா செனறு அவருடன் பேசியபோது காணிகளைத் தாருங்கள் நான் சம்மாந்துறை மக்களுக்கு அதற்கான வீடமைப்பை அமைத்துக் கொடுக்கின்றேன் என்று கூறினார். நான் இதற்கு முன்னும் இந்த சபையில் கூறியிருக்கின்றேன். எமது பிரதேச சபையின் எல்லைக்குள் இருக்கின்ற தவிசாளர் அவர்களால் குறிப்பிட்ட பாதைகளைத் தவிர அனைத்து வளங்களும் பிரதேச சபைக்குச் சொந்தமானது. அரச நிலங்களை இந்த சபையில் வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்கின்றேன். அவ்வாறு வெளிப்படுத்தியிருந்தால் எங்களுக்கு வருகின்ற பொதுவான விடயங்களை அதில் அமைத்து பிரயோசனத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

சம்மாந்துறையை மட்டும் அழகுபடுத்த வேண்டும் என்பதில் மாத்திரம் நான் அக்கரையாக இருக்க வில்லை. சுற்றுவட்டத்தின் பிரகாரம் விளினையடி சந்தியிலும் அமைக்கப்பட வேண்டும் அதே நேரம் மல்வத்தை சந்தியிலும் இருக்க வேண்டும் என்று RDA கௌரவ அமைச்சருடன் பேசிய போது என்னை அதற்கான பணிப்பாளருடன் தொடர்பு படுத்தியிருந்தார். நான் அவருடன் பேசும் போது சுற்றுவட்டம் அமைக்கப்படுவதாக இருந்தால் 100 அடி சுற்று நிலம் இருக்க வேண்டும. இல்லாவிட்டால் அதனால் வாகனங்களைத் திருப்புகின்ற நேரத்தில் மிகவும் சிரமங்களை ஏற்படுத்தும். அதனால் அதற்குரிய நிலத்தை ஒழுங்கு படுத்துங்கள் என்றார். அதே நேரம் மல்வத்தையில் படைமுகாமின் பெயர் அடங்கிய ஞபகார்த்த இடம் அவ்விடத்தில் உள்ளதனால் சுற்றுவட்டம் அமைப்பது சிரமம் என்றும் கூறினால். அதற்கு கௌரவ உப தவிசாளர் எடுத்த

முயற்சியைப் பாராட்டுகின்றேன். மேற்குறிப்பிட்ட சிக்கல்களும் இருக்கின்றது என்பதையும் கூறிக் கொள்கின்றேன்.

நான் பல நிகழ்வுகளுக்கு செல்கின்ற போது உறுப்பினர்களுக்குரிய இடங்கள், கௌரவம் சரியான முறையில் வழங்கப்படுவதில்லை என்பது மனவருத்தத்திற்குரிய விடயம். நான் கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்காகவும்தான் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றேன். எனவே அந்த நிலமைகள் உங்களது தலைமையில் நடாத்துகின்ற நிகழ்வுகளிலும்கூட நடக்கக்கூடாது என்பதுதான் எனது வேண்டுகோள்.

சபை உறுப்பினர்கள் பல பிரதேசங்களுக்கு செல்ல வேண்டியிருப்பதனால் கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் மோட்டார் வாகனத்தைப் பெற்றுக் கொடுத்த பெயர் உங்களைச் சார வேண்டும் என்பது எனது அவா. அந்த வகையில் அதனை நீங்கள் கண்டிப்பாக கவனத்தில் கொண்டால் சிறப்பாக இருக்கும்.

இதற்கு முதல் நான் இந்த சபையில் தெரிவித்த விடயம், சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெறும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு கட்சிக்கு ஒருவர்தான் வர வேண்டும் என்ற சுற்றுநிரூபம் இருந்தாலும் எங்களது சபையில் ஆரம்பத்தில் இருந்து பேசப்பட்ட பிரச்சினைகள் அனைத்தும் பிரதேச செயலகத்தினால் விடுகின்ற பிழைகளை மக்கள் எங்களிடம் கூறுகின்றார்கள். அதனை நாங்கள் சபையில் பேசி சபையின் நேரத்தை வீண்விரயமாக்கின்றோம். அதனால் பிரதேச செயலகத்தில் இடம் பெறும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்பதற்காக நான் 02 வது தடவையும் இந்தக் கோரிக்கையை விசேடமான அறிவித்தலை அமைச்சுக்கோ அல்லது உரிய தலைவர்களுக்கோ வழங்க வேண்டும் என சபை சார்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மோட்டார் சைக்கிள் சென்ற அரசாங்கத்தில் வழங்கியது ஆனால் இந்த அரசாங்கத்தில் துரதிஸ்டவசமாக கடன் சுமை இருப்பது அனைவருக்கும் தெரிந்தவிடயமே. நாம் இதனை தீர்மானமாக முன்மொழியலாம்.

நீங்கள் கூறிய விடயங்களில் கௌரவப் படுத்தல். சபை நாடாத்தும் நிகழ்வுகளில் நிச்சயமாக அதற்கு முக்கிய இடம் வழங்கப்படும். ஆனால் மற்ற சபைகளில் அறிவுறுத்தல் கொடுத்தும்கூட அவர்களது மறைமுகமான விடயம் எண்ணிக்கை. அதாவது 20 உறுப்பினர் இடம் போதாது என்ற பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் அவர்கள் அழைத்தால் நிச்சயமாக அந்தக் கௌரவத்தை வழங்க வேண்டும். இதனை எழுத்து மூலமாகமீண்டும் ஒரு தடைவ திணைக்களத் தலைவர்களிடம் பிரதேச சபை கௌரவ உறுப்பினர்கள் அழைக்கப்படும் போது சபைக்குரிய மரியாதை, கௌரவம் வழங்கப்பட வேண்டும் என்பதனை எத்தி வைக்கின்றேன்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தைப் பொறுத்தவரையில் நான் எழுத்து மூலமாக அனுப்பியுள்ளேன். நமது சபையில் 20 உறுப்பினர்கள் ஆனால் மற்றய இடங்களில் 100 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கின்றதனால் அவர்களுக்கு நடைமுறைச் சிக்கல் வருகின்றது. அதனால் சுற்று நிரூபத்தில் மாற்றம் கொண்டு வரவில்லை. ஆனால் நான் முன்வைத்தது சிறிய சபைகளிலாவது பிரதேச ஒருங்கிணைப்பு தவிசாளர் ஒத்துழைத்தால் அதனை உள்வாங்கலாம். அதனை மறைமுகமாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் MI.மன்சூர் அவர்களிடம் எத்திவைத்துள்ளேன். நிச்சயமாக அடுத்த அமர்வுக்கு செயற்படுத்துவதற்கு என்னால் முடிந்த முயற்சியை செய்வேன்.

**தீர்மானம் 18**
சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை உரிய அமைச்சுக்கு கோரிக்கை விடுத்து பெற்றுக் கொடுப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. யூசுப் லெவ்வை |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அல் அர்சத் வித்தியாலயத்தில் வேலி திருத்தம், தளபாடமும் கோரியுள்ளார்கள். ஆனால் பாடசாலைகளுக்கு நாம் நேரடியாக நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது. சுற்று நிரூபத்திலும் தெளிவாக கூறியுள்ளது. எனவே இவ்விரண்டையும் சபையினூடாக நமது வலயக் கல்வி அலுவலகத்திற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். உள் வேலியை பாராளுமன்ற உறுப்பினர் மூலமாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தினாலும் செய்ய முடியும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த இடத்தில் அல் அர்சத் பாடசாலை சுற்று வேலி கோரல் கடிதத்தில் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். நான் இந்தப் பிரதேசத்தின் சுமார் 20 பாடசாலைகளுக்கான Photo copy இயந்திரமும், தளபாடமும் பெற்றுக் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றேன். அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் கூறிய விடயம் வீடமைப்புத் திட்டம் அது தற்போது வளத்தாப்பிட்டியில் 03 பிரிவுகளில் அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில் இஸ்மாயில்புரம் கிராமத்தில் ஒரு வீடமைப்புத் திட்டம் இடம்பெற இருக்கின்றது. அதற்கான பெயர் பட்டியல் தற்போது எமது பாராளுமன்ற உறுப்பினர் ஊடாகவும் பிரதேச சபை உறுப்பினரூடாகவும் அதற்கான நேர்முகப்பரீட்சை இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதே போன்று வளத்தாப்பிட்டியிலும் இடம்பெறுகின்றது. எனவே சம்மாந்துறையிலும் இவ்வாறான வேலைத்திட்டங்கள் இடம்பெறுகின்றது என்பதை இந்த சபைக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மல்வத்தைச் சந்தியில் மணிக்கூட்டுக் கோபுரம் வைப்பதற்கான போதிய இடம் இல்லாத நிலை இருக்கின்றது என்றும் கூறினார் நாங்கள் மணிக்கூட்டுக் கோபுரத்தை வைப்பதனால் சந்தியில் அல்ல விபுலானந்தர் சிலை இருக்கும் இடத்தில் போதிய வசதிகள் இருக்கின்றது. அதில் 03 பக்கமும் தெரியக்கூடியவாறு வைக்கலாம். ஒரு சில நகரங்களிலே நாம் அவ்வாறான மணிக்கூட்டுக் கோபுரத்தைக் கண்டுள்ளேன். அதன் அடிப்படையில் நிறுவுவது சிறப்பாக இருக்கும் என்று கருதுகின்றேன். இடம் இருக்கின்றது நிதியைப் பெற்றுத் தர வேண்டியது எங்களது உறுப்பினர்களின் பொறுப்பு. ஆகவே, அதனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வீடமைப்புத் திட்டம் 02 விதத்தில் வருகின்றது. அதாவது அரச காணி இருந்தால் அதற்குள் 10, 15 வீடுகள் அமைத்தல் மற்றயது, தொடர்பாகக் காட்டக்கூடிய பகுதிகளில் அதாவது 10, 15 வீடுகள் ஒரு ஏரியாவிற்குள் வளவு உள்ளவர்கள் வீடு கட்டுவதற்கு நீங்கள் திட்டத்தினை முன்மொழிந்தால் நாம் சபையூடாக நேரடியாக அமைச்சரிடம் சென்று எந்தத்தடையும் இல்லாமல் பெற்றுக் கொள்ளலாம். கௌரவ அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்களிடம் செல்வதில் எனக்கு எந்த சிரமமும் இல்லை. ஆனால் அவரின் திட்டத்திற்குள் வர வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலும் அந்த முயற்சியைச் செய்யலாம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வளவுகளில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் 30 வீடுகள். அரச காணியில் கட்டுவது ஒரு திட்டம். தற்போது கௌரவ தவிசாளர் அவர்கள் கூறியது போன்று

இலங்கையில் 2500 வீடமைப்புத் திட்டங்களை நிறுவ வேண்டும் என்பது கௌரவ அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்களது திட்டமாகும். அதனை அமைப்பதற்கு அரச காணிகள் இல்லாததனால் தொகுதிவாரி வீடமைப்புத் திட்டத்தை உருவாக்குகின்றார்கள். அந்தத் திட்டமானது ஒரு வீதியூடாக சென்று இன்னோர் வீதியூடாக அந்த இடத்தை அடைய வேண்டும் என்ற அடிப்படையில் அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குறிப்பிட்ட திட்டமும் வளத்தாப்பிட்டியில் இடம்பெறுகின்றது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, திருக்கோவிலில் இடம்பெற்ற கௌரவ அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்களது கூட்டத்திற்கு நானும் சென்ற போது எனது வட்டாரத்திற்குள் வீடமைப்பதற்குரிய கடிதத்தை தருமாறு என்னிடம் ஒரு வேண்டு கோளை விடுத்தார். பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் போது நான் தரலாமா? என்று கேட்டபோது, ஆம் நீங்கள் தரலாம் என்று கூறினார். அந்த இடத்திலே நான் ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்த போது அவர் 25 வீடுகள் அமைப்பதற்கு சிபார்சு செய்து தந்தார்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு முதல் கௌரவ உறுப்பினர்களால் பேசப்பட்ட அஸ்ஸமா பாடசாலையின் காணிகள் சுவீகரிப்பு சம்பந்தமாக நாம் கண்டிப்பாக கவனத்தில் எடுக்க வேண்டும் அதே போன்ற கல்லரிச்சல் 02ம் பிரிவில் ஏத்தாளக்குளம் பாடசாலையில் இடம் பற்றாக்குறை காரணமான கடந்த ஒக்டோபர் 16 ஆம் திகதி இடம் பெற்ற பிரதேச செயலக ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பேசப்பட்டவாறு MPCS க்கு எழுத்து மூலமாக அறிவித்து அவர்களுடைய அனுமதியை வேண்டிய வண்ணம் கடிதம் அனுப்பப்பட்டது.

கடந்த 2019.02.03 ஆம் திகதி இடம்பெற்ற MPCS பொதுச்சபைக் கூட்டத்தில் SP/12 பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பராமரிப்பில் உள்ள அரச காணியை ஏத்தாளக்குள பாடசாலைக்கு கொடுக்க முடியாதென்றும், அப்படிக் கொடுப்பதென்றால் பெற்றோல் செட்டில் 1,450,000 ரூபா சோட்டஸ் இருக்கின்றது அதனை ஈடு செய்வதற்கான நிதியைப் பெற்றுத் தந்தால் கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். யாரோ ஒரு தனிநபர் ஏற்படுத்திய நஸ்ட்டத்தை ஈடு செய்வதற்காக பொதுச் சொத்துக்கு நிதி அறவிட வேண்டும்மென்றும் அல்லது பொதுச் சொத்தை விற்று நஸ்ட்டத்தை ஈடு செய்வதென்று பேசப்படுகின்றது.

அங்கே கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அரசியலை மையமாக வைத்து செய்யக்கூடியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அதே நேரம் நான் அவ்விடத்தில் அவர்களைச் சார்ந்த பிரதிநிதியாக அதாவது நான் ஒரு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக அல்லது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினராக அல்லது ஸ்ரீ லங்கா சுததந்திக் கட்சியின் உறுப்பினராக இருந்திருந்தால் அக்கானியை பாடசாலைக்கு கொடுப்பதென்று முடிவெடுத்திருக்கலாம். மாறாக நான் அகில இலங்கை மக்கள் காங்ரஸ் உறுப்பினர் என்பதனால்தான் இதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள். அது மாத்திரமல்ல அதே கல்லரிச்சல் 02 ம் பிரிவில் இருக்கின்ற SP/12 கிழையில் உறுப்பினராக இருக்கினறவர்கள் ஆசிரியர்கள், பள்ளித்தலைவராக இருந்தவர்களும்கூட இதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள்.

அப்பிரதேசத்திலே வாழ்கின்ற சிறார்கள் கல்வி கற்கின்ற பாடசாலை அந்தப்பாடசாலையில் 200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். மாணவர்களுக்கு காலைக்கூட்டம் நடாத்துவதற்குக் கூட போதிய இடமில்லாத சுற்றுச்சூழலைக் கொண்ட அப்பாடசாலை பழமைவாய்ந்த 02 கட்டடத்தில் அம்மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டு கற்கின்றார்கள். சென்ற வருடம் NSBS வேலைத் திட்டத்தின் கீழ் 03 மாடிக்கட்டடம் அந்தப் பாடசாலைக்கு வந்தது. அதனை நிர்மாணிப்பதற்று போதிய இடமின்மையினால் அது திரும்பிச் சென்றுவிட்டது.

SP/12 கிழையின் காணியின் பாழடைந்த கட்டடத்தில் இரவு நேரங்களில் கஞ்சா, மதுபானம் போன்ற போதைப் பொருட்கள் உபயோகிக்கப்படுகின்றது. இங்கே பெண்கள் இருக்கின்ற

காரணத்தினால் என்னால் விடுத்தப் பேச முடியாது என்றாலும் இரவு நேரங்களில் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து வந்து இந்தக்கட்டடத்தில் தவறான செயல்கள் நடக்கின்றது. இது போன்ற தவறான செயலை தடுக்கும் முகமாக அப்பிரதேச மக்களின் கல்வியின் அபிவிருத்திக்கான SP/12 கிழையின் காணியை ஏத்தாளக்குழம் பாடசாலைக்கு கொடுக்க வேண்டும் என்றும், 2019 ஆம் ஆண்டுக்கான NSBS வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சியில் நாம் அனைவரும் ஒன்றினைந்து அந்தக் காணியை ஏத்தாளக்குழ பாடசாலைக்கு கொடுப்பதற்கான தீர்மானத்தினை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது பொருத்தமான விடயம்தான். உண்மையாக பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பராமரிப்பில் உள்ள அரச காணிகள் ஒரு சங்கத்தின் சொத்தாக கருதப்பட வேண்டும் என்று கருதுகின்றேன். ஆனால் சில விடயங்களில் அதாவது இன்று அனைத்து இடங்களிலும் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினால் பராமரிக்கப்பட்ட சொத்துக்கள் இன்று கேட்பார் இல்லாத பிள்ளையாக பாழடைந்த நிலையில் இருக்கின்றது. அந்த வகையில் பாழடைந்த நிலையில் இருக்கின்ற அரச காணியாக கருதப்படும் இடங்கள் பொதுத் தேவைக்காக விடுவிக்கப்பட வேண்டும். என்றும் சபையால் தீர்மானம் எடுக்கலாம்

**தீர்மானம் 19**
பராமரிக்கப்படாத பாழடைந்த நிலையில் இருக்கும் அரச காணியாக கருதப்படும் இடங்கள் பொதுத் தேவைகளுக்காக விடுவிக்கப்பட வேண்டும் என்று சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம். சஹீல் |

**தீர்மானம் 20**
தற்போது சோலை வரி அறவீடு செய்யப்படும் 20 கிராம சேவையாளர் பிரிவுகளிலுமுள்ள ஆதன வரி அலகுகளின் (10800) விபரங்களை eLG திட்டத்தில் ICTA நிறுவனத்தினால் கணனி மயப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. இப்பணியில் எதுவித கொடுப்பனவுமின்றி இருவர் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு 06 மாத தற்காலிக பதிலீட்டு அடிப்படையில் வேலைத் தொழிலாளியாக நியமனம் வழங்குவதற்கும் புதிதாக தாபிக்கப்பட்ட கல்லரிச்சல், கைகாட்டியடி சிறுவர் விளையாட்டுப் பூங்காவில் கடமையாற்ற 04 வேலைத் தொழிலாளிகளை 06 மாத காலத்திற்கு தற்காலிக அடிப்படையில் நியமனம் வழங்கவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
12 வது ஒரு வருடம் பூர்தியான சபை அமர்வு இனிதே நிறைவுபெறுகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

*2019.02.12 Sammanthurai Pradeshiya Sabha – 12*

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.